8
170113

# மாணிக்கவாசக சுவாமிகளது சரித்திரக் கீர்த்தனை

C

O23'4:7x1
N32
170113

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

6 - JUN 1932

சைவ சித்தாந்த சமயாசிரியர் நால்வருள் ஒருவராகிய

திருவாதவூரர், ஆளுடையடிகள் எனவழங்கும்

அருள் மிகு திரு

# மாணிக்கவாசக சுவாமிகளது

# சரித்திரக்கீர்த்தனை.

இஃது

தஞ்சை, கரந்தை, பஞ்சநத பாவாமடத்தில்

எழுந்தருளியிருந்த

கந்தசாமிச் சுவாமிகள் எனும் இயற்பெயர்வாய்ந்த

**திரு. கருணைப்பிரகாச சுவாமி அவர்களால்**

திருவாய் மலர்ந்தருளப் பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

பதிப்பாளர்.

சிவ. குப்புசாமி.

கருந்திட்டாங்குடி.

பதிப்பகம்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை.

**1932.**

உரிமைப் பெற்றது] [விலை அணா 5

170113 1895

## முகவுரை

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழிக்கு அணிகலன்களாகப் பெரியோர்கள் பலராலும் அழகிய நூல்கள் பல ஆக்கப் பெற்றுள்ளன. எனினும் அவற்றுள் பெரும்பாலானவை, கற்றோர்க்கேப் பயன் தருவனவாய் உள. தமிழ்மொழிபயிலும் எவரும் எளிதில் அறியுமாறு, நம் நாட்டுப் பெரியார்களின் வரலாற்றை இசைப்பாடல்களுடன் தீம்சுவைத் ததும்ப வெளியிட்டவர்களுள் திரு. அருணாசலக்கவி. திரு. கோபாலகிருஷ்ண பாரதி இவர்களே முதன்மை பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் உலகுக்கு அளித்த இராம நாடகக்கீர்த்தனை, நந்தன் சரிதக்கீர்த்தனை இவற்றின் போக்கைத் தழுவி **'மாணிக்கவாசகர் சரித்திரக்கீர்த்தனை'** எனும் இந்நூல், திருப்பூந்துருத்தி, வீ. துரைசாமி முதலியார், கொண்டாவட்டந்திடல், ஐ. சுப்பிரமணிய முதலியார் இவர்களது வேண்டுகோட்கிணங்கி, சொல் பொருள், இசை அமைவுடன், கரந்தை முத்தமிழ்ப் புலவரும், சிவப்பெருந் தொண்டரும், 'கருணைப்பிரகாசன்' எனும் துறவுப் பெயர் பூண்டவரும், எனது பெரிய தந்தையுமாகிய திருமிகு. கந்தசாமிச் சுவாமிகள் அவர்களால் இயற்றப்பெற்று சோப கிருது (1903) சித்திரைத் திங்களில் வெளியிடப் பெற்றது. இந் நூலின் அமுதமொழியினைப்பருகிய அன்பர்கள் பலரும் திரு. கந்தசாமியார் அவர்கள் அட்சய (1926) ஆண்டு ஆடித் திங்களின் பூரத்தன்று திருவருளுடன் இரண்டறக்கலந்த பின் இருந்து என் தந்தையார். திரு. சோமசுந்தரம்-சிவசாமி பிள்ளை யவர்களை வெளியிட வேண்டியும் எதிர் புராநிலையில் அவர்களும் இறைவனடி சேர்ந்தமையால் இன்றுவரை தவக்கம் ஏற்பட்டது. இப்பதிப்பில் உரை நடைப்பகுதிகள் சுருங்கத் திருத்தியும் எளிதில் பொருள் கொள்ளுமாறு செய்யுட்கள் சந்தி பிரித்தும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இந்நூல் விரைவில் வெளிவருவதற்குப் பலகால் என்னை ஊக்கியும், உதவியும்வந்த தஞ்சை, வடக்கு அலங்கம், பதிப்பக முதல்வர் திரு. செ. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கட்கும், கரந்தை, சீரங்கக் கொத்தன் தெரு கூலவாணிபம் மொ. சோலை முத்துப்பிள்ளை யவர்கட்கும், தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத் தார்களுக்கும் என் மனமுவந்த நன்றி உரியதாகும்.

இந்நூலில் ஆங்காங்கு ஏதாவது என்தவறால் ஏற்பட்டு எழுத்துப் பிழைகள் இருப்பின் அவற்றைப் பொறுத்துக் கொண்டு, அடிகளது வேறுநூல்களும் இவ்வண்ணமே வெளி வரத் துணைபுரியுமாறு வேண்டுகின்றேன்.

நாராயணக் கொற்றன் தெரு.<br>ஆங்கிரச (1932) சித்திரை.

**சிவ. குப்புசாமி.**<br>கருந்திட்டாங்குடி, தஞ்சை.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்

தஞ்சை, தூயபேதுருக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருத்தவத்துறை

## திரு அ. சேதுராமபாரதியாரவர்கள் இயற்றிய

கோச்சகக்கலிப்பா.

பொன்பூத்த செஞ்சடிலப் புனிதனடி யேபுகழு<br>மின்பூத்த மணிவாசகப்பெருமான் வியன் சரிதம்<br>தென்பூத்த கீர்த்தனையாச் சொன்னான் கரந்தையமர்<br>இன்பூத்த கருணைவிளக் காமினிய புலவோனே.

தஞ்சை, தூயபேதுருக் கல்லூரி உதவித் தமிழாசிரியரும்<br>வையை-இராமசாமி ஐயாவர்கள் குமாரருமாகிய

## திரு சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய

கட்டளைக்கலித்துறை.

O28:U7x1 N32

மாணிக்க வாமொழி மங்கைபங் காளன் மறந்தறியா<br>மாணிக்க வாய்வருங் காலனைக் காய்ந்த மலரடித்தேன்<br>மாணிக்க வாய்வழிந் துள்ளெலா மூறி வரர்பிகந்த<br>மாணிக்க வாசகர் கீர்த்தனை யன்பின் வகுத்தவனே.

பரந்தை வரும்படி போகா தடக்கிப் பழம் பிறவிக்<br>கரந்தை வரும்படி யம்பலத் தாடி யடிக்கமலஞ்<br>சிரந்தை வரும்படி யானந்த வாரி திளைத்துவப்பான்<br>கரந்தை வருகரு ணைப்பிர காச கவிவரனே

1895 784.0954

தஞ்சை, கலியாண சுந்தரம் நடுத்தரக் கல்லூரித் தமிழாசிரியர்

## திரு முத்துசாமி ஐயரவர்கள் இயற்றிய

மட்டு விருத்தம்.

பழுத்ததெங்கின் பழஞ்சிதறப்பாய்ந்துபூகமடற்குதிக்குங்<br>கொழுந்தவாளை திரிதடங்கள்குலவுங்கரந்தைநகர்வாழ்வோன்<br>வழுந்துங்கருணைப்பிரகாசன்வாதவூரெங்கோன்மகிமை<br>தழைக்கசரிதங்கீர்த்தனையாத்தந்தானுலகந்தழைத்திடவே

தஞ்சைமாநகரக் கரந்தையம்பதியில் வசிக்கும்
அஷ்டாவதானம்

## திரு க. இராமசாமி பிள்ளையவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொங்குதிரு வாதவூர் தனிலாமாத்யப் பூசுரர்மா குல திலகப் புனிதராகி, அங்குசிறு வயதகன்றே கூடற்கேகி யரிமர்த் தனன்றனக்கே யமைச்சுமாகி, எங்கள்பிரான் றனக்குரிமை யன்புபூண்டே யிறைதருமா நிதியுடன் சென்றிறைபாசாறுந் தங்குருந் தடியிலுப தேசம்பெற்றுத் தானுந்திருப்பணியியற்றித் தகையோரினும்.

மன்னெறுக்கப் பெற்றேரி யிவுளியாய்த்தென் மாறனுக் கிட்டிடமாமுன் வடிவமாகப், பின்னும்வைகை பெருகவந்தி யிடும் பிட்டுண்டே பிரம்படிகொண் டிட்டபிரான் பிரியம்பெற்று, பன் னுபுத்தர் களைவாதில் வென்றுமூமை மாற்றியெழிற் கோவை திருவாசகத்தேன், இன்னிசைகேட் டெழுதிமுதன் மாணிக்கப் பேரேய்ந்துதில்லைக் கிறைவனரு ளெய்தாநின்ற.

தெய்வமணி வாசகரின் சரித்திரத்தைச் செந்தமிழ்க் கீர்த் தனையாகச்செய்தான்ஞானர், சைவமணி கருணைபொலிநிறைந்த கந்தசாமி தஞ்சை மாநகரான் றவத்தோர்க்கென்றும், பைவின் மணி கரத்தமைந்த பான்மை போலப் பரிசுபெற்றதமளிக்கப் பரிவாச்செல்வி, கைவின்மணி யாயிலங்கப் புகழாமின்னுற் களிப்புறச்சந் ததமோர்ந்து கருதுவோர்க்கே.

---

மதுரையைச் சார்ந்த திருப்பரங்குன்றம் திருவாளர்

## அரு. நாராயணசரணரவர்கள் இயற்றிய

அறுசீரடி யாசிரியவிருத்தம்

கார்படியுந் தண்டலைசூழ்வாதவூர் தனிற்றோன்றிக்கலைகளியாவு
மோர்பருகவுளத்துணர்ந்துவரசியல்புமுலகறியவினிதுகாட்டிப்
பார்பரவும்வழுதிபொருள்தனைப்பரமர் திருவடிக்கேபண்பாயாற்றி
பேர்பெருகுமாணிக்கவாசகனார்சரித்திரத்தைப்பெரியோர்கொள்ள.

சித்தவளைப்படைசுவறவிடுத்தவனைத்தந்தவனைச்செம்பொன்மேரு
முந்தவளைத்தவனையுடைக்குடையவனைவிடையவனைமுக்கணனை
யத்தவளையரிக்கறியவனைக்கருதுங்கருத்துளானகல்பாலாழி
தந்திடுதாக்கணங்கொடுநோக்கணங்கினையுமிருவிழிபோற்றழைக்கச்செய்து.



காவரசர்குடியிருந்தலைத்தகுபூந்துருத்திநகர்நயந்துமேவிப்
பாவரசர்புகழ்த்தேத்தப்பகலிரவுங்கொடைகொடுக்கும்பண்புபூண்டோன்
காவரசுநிழலிருந்துகண்ணிறைந்தமேனியன்போற்கவிஞர்போகம்
பூவரசர்வியப்படையப்பொருந்தியினும்புகலவொணுப்புனிதசீலன்.

அன்னவன்யாரெனிலறைதுமகிலமெலாம்புகழ்படைத்தவனபாயன்றன்
மன்னரசின்றொழிற்கிணங்கமந்திரியாயவதரித்துமாதேவன்றாட்
சென்னிமிசையிறுத்துசேக்கிழார்மரபில்வந்துதித்துச்சீரார்ந்தோங்கிப்
பன்னுபுகழ்துரைசாமிமுதலியார்கீர்த்தனைப்பாப்பகர்கென்றேத.

தித்திக்குங்காவிரிசூழ்தஞ்சைநகர்தனைச்சார்ந்துதிருவமோங்கி
யெத்திக்கும்போற்றுதிருக்கரந்தைநகர்தனிற்றோன்றியின்பதுன்பம்
புத்திக்குமிகத்தெளிந்துநித்தநித்தப்பொருளோர்ந்துபுலமைவாய்ந்து
முத்திக்கேவழிகாட்டுநால்வர்தமிழ்த்தனையன்றிமொழியாநாவால்.

இயலிசைநாடகத்தமிழினெச்சுவையுமாங்காங்குவெடுத்துக்காட்டிக்
நயலிசையும்விழிமடவார்தனைக்கண்டகாமுகர்போற்கவிஞர்மாழ்க
நயமிசையுங்கந்தசாமிச்சுவாமியென்னுங்கருணைவிளக்காமம் [ஞே.
மயலிசையாப்பேர்படைத்தான்மன்னுலகோரதிசயிக்கவகுத்தான்மன்

---

தஞ்சைமாநகரைச்சார்ந்த வெள்ளாம்பிரம்பூரில் வசிக்கும்

## திருவாளர் ச. துரைசாமிச் சோழகரவர்கள்

இயற்றிய
எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்மேவுமியலிசையுமொருங்கே யோர்ந்தோன் சித்தாந்த வேதாந்தப்பொருளிற்றேர்ந்தோன், பார்மேவுமாதர் பொருண் மண்ணினைசைப் பற்றுதோன் நால்வர் தமிழ்ப் பண் சொல் வல்லோன், நீர்மேவுவளத்தஞ்சைக்கரந்தைவாழ்வோன் நின்மல நற் கருணைப்ரகாசத்துயோன், பேர்மேவு வாதவூரடிகள் சரித்தி பேசுகீர்த்தனைப்பெருமைபுகலப்பாற்றே.

வாதவூர்ப்பெருமான் சீர்ப்பாற்பெளவத்தைவண்மை பெருநாக்கிரியாற்கடைந்துமிக்கக், கீதமெனுமமுதைவிண்ணோர்மண்ணோர் தங்கள்கிளர்செவியாம் வாயினிற்பெய்தானுண்டோர்கள், போதமிகுந்தானந்தத்தம்பியென்றும் போக்குவரவில்லாமேற் கதியைச்சேர்வர், பூதலத்திலிப்பெருமான்செய்தநன்றிபோலெவர்தான்புரியவல்லபுனிதர்தாமே.

இக்கடக்குந் திருக்கரத்திற்சேராமைக்கொடுகவிழ்க்கத்திகழும்பொன்னிச் சீர்மேவும் பூந்துருத்திதனிற் சேக்கிழார்மரபிற்செனித்ததூயோன், சந்தமறைப்பொருளுணர்ந் ததுரைசாமி முதலியார்தனதன்றுனும் தகைமைமிகுகொண்டாவட்டந்திடல் வாழ்சுப்ரமண்ய முதலியாரு, நக்கடக்குங்கரத்தோனல் நவிலவொண்ணு வாதவூர் நண்பர்சீர்த்திகற்றமிழிற்கீர்த்தனையாய் நவிலவெனக்கரந்தையில் வாழ்ஞானமிக்கோன், ஐந்தடக்குமறிவாளனுறடக்கும்வேணியன்பாலன்பு பூண்டோனருந்துறவிகருணைப்ரகாசவள்ளல்கீர்த்தனையாயமைத்தான்மாதோ.

### நேரிசை வெண்பா.

கோகன்னன் கும்ப முனிவோய் கலையடங்கை
பாகன்ன சொற்போற் பகர்கில்லா—மாகன்னம்
போத வினித்தெலப் பூவரைநா வின்மறைந்தார்
கீதமலி கீர்த்தனையைக் கேட்டு.

---

தஞ்சைமாநகரம் கரந்தையம்பதியில் வசிக்கும்
## திருவாளர் ம. கண்ணுச்சாமிசெட்டியாரவர்கள்
### இயற்றிய
### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

வாணிக் கிருப்பிடமா வாழ்தஞ்சை யிற்கரந்தை வந்தி யாருஞ்
சாணக் கருணையொளி மேவுகந்தசாமியெனுங் காட்சி மேலோன்
ஆணிக் கனகசபை யானந்தக் கூத்தனுக்கா ளாகிப் பாடும்
மாணிக்க வாசகர்தஞ் சரிதத்தைக் கீர்த்தனையா வகுத்தான் மன்
[னே.

**சிறப்புப்பாயிரமுற்றிற்று.**

---

க.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பாயிரம்

---

### விநாயகர் வணக்கம்

மருமலர்ப்பூஞ் சோலைகளும் வாவியெரி மல்குதிரு வாதவூர்தனில் ஆமாத்யர், பெருமையுறுங் குலத்துதித்த வாதவூரர் பிறங்கிவளர் சரித்திரத்தைக் கதையாய்ப்பாடக், கருமுகில்போல் அருள் மதத்தைப் பொழியுங்குஞ்சரக் கரமைந்துங் கரிமுகமும் முநகொட்புங்கொள் (ந) அருவினைதீர்த் தன்பரையாளுங் கணேசனடிக்கமல மென்றுமகத் திருத்திப்பாம். (க)

### சித்திவிநாயகர் வணக்கம்

அத்துவிதா னந்தபரப் பிரமமாகி யகிலசரா சரவுயிருக் கதாயந்நின்று, பெத்தமுறு பெருங்கடலி லழுந்திவாடிப் பிதற்றுமன்பர்பவப் பிணிப்புநீங்கப், பத்தர்கண்மேற் கிருபைவைத்து முப்பலத்தைப் பாற்பலித்திப் பராவந்த வீட்டைநல்குஞ், சித்திவிநாயகர் பெருமான் கமலத்தாளைச் சிந்தனைசெய் தேவினையைத் தீர்த்துக்கொள்வாம். (உ)

### முருகன் வணக்கம்

வெற்றிபுனை வடிவேலால் வெற்புகிரௌ வுஞ்சமுடன்
உற்றகட லவுணருர முடம்பிளப்ப வுறுதியுடன்
செற்றுயுய வலிமைமிகுஞ் செவ்வேள்செம் மலரடியைப்
பற்றுறவெந் நாளுமனம் பாவித்துப் பலமொழிப்பாம். (ங)

### அம்பலவாணன் வணக்கம்

பதஞ்சலியும் புலிமுனியும் பங்கயன்மால் பண்ணவரும்
இதஞ்சலியாச் சிவகாமி யெல்லோரு மகிழ்ந்திது அற்
புதஞ்சலியா நடமென்னப் பொதுவினட மிடும்பரமன்
பதஞ்சலியா மலரடியைச் சந்ததமுந் தொழுதிடுவாம். (ச)

### சிற்சத்தி வணக்கம்

அண்டமெலாம் ஈன்றுதிரு வருளினாலே யவ்வுயிர்கள் தமக்கன்னை யாகிநீல, கண்டனிட மமர்ந்தமனோன் மணியேகாழிக் கவுணியர்க்குப்பால்சுரந்த கருணைச்சிந்தே, கொண்டலெனத்தொண்டர்களுக் கருள்செய்ஞானக் கோதிலாத் தெள்ளமுதே குலவுமன்பர், வண்டடரு மலர்த்தாளை மனத்தில்வைத்து வழுவாமலெந்நாளும் வாழ்த்துவோமே. (ரு)

### கலைமகள் துதி. கலிவிருத்தம்

கல்வி ஞானங் கழல்பணி வோர்க்கருள்
செல்வி பாவலர் சேவித்திறைஞ்சிடும்
நல்விதவெண் ணளினம்வாழம்மையைப்
பல்விதப்பொரு ணல்கப்பணிகுவாம். (சு)

### திருவாதவூரர் வணக்கம்

பெருந்துறை புகுந்தங்கீசன் பேரரு ளடைந்து, நெஞ்சம்
வருந்திக்கை தலைமேல்வைத்து வணங்கிநின் றழுதுகண்ணி
விருந்தெழு புனலுண்மூழ்கி யிறைவன்மேற் பாடல்சொன்ன
அருந்தவ வாதவூர ரடிமலர் முடிமேல்வைப்பாம். (எ)

### அறுபத்துமூவர் வணக்கம்

என்புபெண் ணுருவமாக இருங்கடற் கன்மிதப்ப
அன்பினாற்கராவுண்சேயை யழைத்தருண் மூவரோடும்
துன்பில்பத் தாறுமூவர் தூயதிரு நாயன்மார்கள்
இன்பநற் குளிர்ச்சிவாய்ந்த யிணைமலர்ப்பதந்துதிப்பாம். (அ)

### அவையடக்கம்

சிற்றில்விளை யாடுகின்ற சிறுவர்போலுஞ் செழுமதிமுன் இலங்கிடுமின் மினியைப்போலு, முற்றகருங் கடற்கடக்கத் துரும்புபற்றி யுளந்துணிந்த வன்போலு முயர்ந்தோர்முன்னஞ், சொற்றிறமி லாநாயேன் வாதவூரர் சுத்தசரித் திரத்தைக்கீர்த்தனையாய்ப்பாடிக், கற்றவன்போல் வெளியிட்டே னிதனிற் குற்றங் களைந்துபொருட் கைக்கொள்வர்கலை வல்லோரே. (கூ)

### நூற்பயன்

பந்தணைமென் விரலுமையாள் பாகனது திருவருட்பெற்
றுய்ந்துயர்ந்த திருவாதவூரர்சரித் திரமிதனைச்
சிந்தனைசெய் தேத்தினருஞ் செப்பினருங் கேட்பவரும்
அந்தமிலாச் சிவபதத்தை யடைவர்இதற் கையமிலை. (ய)

(பாயிர முற்றிற்று.)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாதவூரரெனும் மாணிக்கவாசக அடிகளின் வரலாற்றுக்கீர்த்தனை.

விநாயகர் வணக்கம்—கீர்த்தனம்-இராகம்-சாக்தோட்டி, ஆதிதாளம்

### பல்லவி

திருவளர்வல்லபைசேர்பாகா தேவர்முனிவர்வணங்கிடுந்தியாகா
கரிமுகத்தரசேகணயோகா கருணாகரவாகா. திருவளர்.
பாராங்குசதரமுன்னவனே பவக்கடல்கடத்திடுமன்னவனே
பேராப்பேரின்பமன்னவனே பெருமறைசொன்னவனே. திரு-
பிரணவவடிவேபெம்மானே பிழைபொறுத்தாண்டருளெம்மானே
கரணம்புலன்கடந்தஅம்மானே கதியருள்செம்மானே. திரு-
வாக்கிலிருந்தருளவருவாயே வணங்குமன்பருக்கருள்புரிவாயே
நோக்கியேமாங்கனிபெறுவாயே நுவல்பொருள்தருவாயே. திரு-
சந்திரசேகரன்தந்தகுணநீதா சார்ந்தமரார்பணியும்பிரைக்காதா
கந்தசாமிதுதிக்கும்பொற்பாதா களிப்புறுங்கணநாதா. திரு-

## மணிவாசகரின் வரலாற்றுச்சுருக்கம்

சொண்டிச்சிந்து-இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

திருவாழ்பழம்பதியாம்-அதிற்-றிண்ணமிருஞ்சோலைபூங்காவும்
காவல்சூழ்குளமேரி-பாயுங்-கால்வாயும் அன்னங்கிளிகுயிலும்
நாரைபுறாக்கள்கொக்கு-சிட்டு-நாரத்தம்பிள்ளையநேகபுட்கள்
உலவிப்பெடையுடனே-களிப்-புற்றிடும்வையைக்கரையோரம்
இருக்குமுயர்தலமாம்-அதி-லிந்திரன்முதற்பலரும்தொழு
[திறைஞ்சுந்

திங்கள்புனலரவும்-சூடுஞ்-செங்கண்விடையேறுஞ்சங்கரனார்
தங்குஞ்சிவாலயமும்-சிவன்-தாள்பணிதொண்டர்தபோதனரும்
வேள்விசெய்சாலைகளும்-பாடல்-விற்பனரும்வேதியர்குழுவும்
உழவருப்பண்ணைகளும்-எல்லா-மோங்கிச்செழித்துநிறைந்
[திலங்குந்

திருவாதவூரதனில்-வேதஞ்-செப்பும்ஆமாத்யகுலமறையோர்
சம்புபாதாசிருதர்-அவர்-தக்கபெண்டிர்சிவஞானவதி
யம்மையிருவருக்கும்-பிள்ளை-யாகவுலகிலவதரித்தார்
வாதவூராமவர்பேர்-மறை-வண்மையதானவெண்ணெண் [கலையும்
பதினாறுண்டிற்குட்பயின்று-கூடற்-பாண்டியனிடமமைச்சுரிமை
யியற்றியேழ்கோடி-செம்பொன்-னிவுளிவாங்கவெடுத்துக் [கொண்டு
கோலப்பெருந்துறையில்-வந்து-குருந்தடிவாழ்குருபரனால்
ஞானவுபதேசம்-பெற்று-நாலுபத்தேதான்பதுகோடிபொன்னைச்
செலவிட்டுக்கோயில்கட்டி-வந்த-சீட்டையறிந்துமதுரைவந்தார்
அசுவமெங்கென்றரசன்-கேட்க-ஆவணிமூலம்வருமெனவே
சொன்னசொற்கேட்டனுப்பி-விட்டான்-றுதலைமந்திரியில் [ஒருவன்
பாண்டியன்முன்னேகித்-தங்கள்-பணத்துக்குப்பரிவாங்காமல்
அடியார்களுக்களித்தார்-என-வறிவிக்கமன்னன்தூதனுப்பிப்
பார்ப்பாய்பெருந்துறையில்-என்றான்-பரியிலையெனத்தூதர் [சொல்ல
அரிமர்த்தனபாண்டியனுங்-கேட்டு-அங்கம்பதைத்துச்சினமீறி
வாதனைசெய்கையிலே-திரு-வாதவூரர்சிவனைத்துதிக்க
நரியைப்பரியாக்கிப்-பாண்டி-நாடாளுமன்னனிடஞ்செலுத்த
அன்றிரவிற்பரிகள்-நரி-யாகிப்பழையபரியையெல்லாங்
கொன்றுபுசித்துவிட்டுப்-பெருங்-கூக்குரலிட்டுவனம்புகுந்த
சேதிதனையறிந்து-மன்னன்-செவ்வழல்போல்மனமுங்கொதித்து
வையைநதிமணலில்-திரு-வாதவூரரைநிறுத்திவைத்தான்
வேதனையால்வருந்தி-யன்பர்-வேண்டிடஈசனும்அப்பொழுது
வையைநதிபெருகச்-செய்து-வந்திக்குமண்சுமக்குமாளாய்ப் [வே
பாண்டியன்கைப்பிரம்பால்-அடி-பட்டுமண்கொட்டிமறைந்திட
அதிசயங்கண்டரசன்-மிக-அன்புடனன்பரைத்தான்வணங்க
விடைபெற்றுவாதவூரர்-புகழ்-மேவுஞ்சிதம்பரம்போயடைந்து
புத்தர்முன்வாதுசெய்து-மூகைப்-பொற்கொடியைமிகப்பேச [வைத்து
திருவாசகங்கோவை-பாடத்-தில்லைச்சபாநாதர்கேட்டெழுதிக்
கையொப்பம்வைத்தனரே-யது-காலத்தில்மாணிக்கவாசகருந்
தில்லைமூவாயிரருந்-தவச்-சிலருந்தொண்டருங்கொண்டாடப்
பரவெளியிற்கலந்தார்-அதைப்-பார்த்தோர்களெல்லாம்வியப்
சம்போசதாசிவனே-சிவ-சாம்பசதாசிவசங்கரனே. [புறவே

---



# நூல்

### கீர்த்தனம்-இராகம்-குறிஞ்சி-ஆதிதாளம்

### பல்லவி

அந்தம் வாதவூரர் சரிதமானந்தம் சிவனாருக்குச்
சொந்தம் கேட்போர்க்குப்பவபந்தம் தொலையும்வெகு. அந்தம்.
தேடி, திருவருளைநாடி என்புஉருகப்
பாடி பரவசங்கொண்டாடி பரகதிசேர். அந்தம்.
நாலை புணர்ந்தஇவர்போலே பூமிதனின்
மேலே யிருக்காதொருக்காலே அரிதரிது. அந்தம்.
பத்தி, கடலில்உளம்நத்தி, கண்ணீருகுத்துக்
கத்தி பரமானந்தமுத்தி பெறவுதித்த. அந்தம்.
மெய்யர் பரனைத்தொழுங்கையர் அருளடைந்த
துய்யர் வையம்பரவும்ஐயர் மணிவார்த்தைசொல். அந்தம்.

---

### கீர்த்தனம்-தக்கடா-தோடயம்-ஆதிதாளம்

வாதவூரிலாமாத்யகுலவேதியர் வானவன் சிவலோக
நாதனைப் பணிசம்பு பாதாசிருதர்சிவ ஞானவதியிவர்க்குப்
போதபானுவெனப் புத்திரராகப் பூமியி லவதரித்துப்
பேதமகன்றதிரு வாதவூரரெனும் பேர்புனை புண்ணியராம்.

---

### திருவிளையாடற்புராணச் செய்யுள்

பேர்வாத வூரரெனப் பெற்றுத்தம் பிறங்குமறைக்
சார்வாய நூல்வழியாற் சடங்கெல்லா நிறைவெய்தி
தீர்வாய இளமதிபோல் நிரம்புவார் வேதமுதற்
பார்வா யெண்ணெண் கலையும் பதினாறாண் டினிற்பயின்றார்.

### இதுவுமது

இத்தகையோர் நிகழ்செய்தி யறிந்தவர்சென் றியம்பஅரி
மர்த்தனபாண் டியன்கேட்டு வரவழைத்து மற்றவரைச்
சித்தமகிழ் வரிசையினாற்சிறப்பளித்துத் தன்கோயில்
வித்தகநன் மதியமைச்சின் றொழில்பூட்டி மேம்படுத்தான்.

---

[பாண்டியன் அரிமர்த்தனன், வாதவூரரின் அருஞ்செயற்களை ஆய்ந்து தென்னவன் பிரமராயன் எனும் சிறப்புப் பெயரை நல்கினன். வாதவூரரும் கற்றோரும் மற்றோரும் புகழ அமைச்சுத்தொழிலை வளம்பட நடத்தி வந்தார்.]

## திருவாதவூரரின் அமைச்சுத்தொழில் மேம்பாடு

**கீர்த்தனம் இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்**

**பல்லவி**

*மந்திரி வேலைபார்த்துவந்தாரே வாதவூர்வள்ளல் மந்திரி*

**அனுபல்லவி**

முந்தியவமைச்சர்மோக
முக்யமுதன்மந்திரியாகப்-பாண்டியனுக்கு
மோசம்வாராமலன்பாகத்-தன்காரிய
முற்றுஞ்செய்துவொழுங்காக. மந்திரி

அன்னதானங்கோதானம்
அர்த்ததானம்வஸ்திரதானம்-பூவுலகினில்
அரிவைதானம்பூமிதானஞ்-சோடசதான
மநேகஞ்செய்துவெகுமானம். மந்திரி

பாடசாலையக்கிராரம்
பணியுமாலயங்கள்தீரங்-குளஞ்சாவடி
படிகள்சத்திரங்கெம்பீரம்-பாதையில்மரம்
பண்பாயமைத்துச்சிங்காரம். மந்திரி

மாதவர்மடமுங்கட்டி
மாநிலத்திற்புகழோட்டி-மறைவேள்விகள்
மாறுமல்மும்மாரிகொட்டி-செழிக்கமண்பால்
வரும்பொருளுரைத்துக்கிட்டி. மந்திரி

[பல்வகை நலனும்பெருக வாதவூரர் வாழ்ந்துவந்தாலும், பிறப்புஇறப்பு எனும் பேயிற்கு அஞ்சி, அதை அகற்றும் குருபரன், தனக்கு எப்பொழுது வாய்க்கப்பெறுவானோவென, பெரிதும் உள்ளம்நைந்து, இறைவனையே என்றும் தொழுது இறைஞ்சிவந்தார்.]

---

**திருவிளையாடற்புராணச் செய்யுள்**

**கலி நிலைத்துறை**

மெய்ம்மையாம்பொருள்விவேகமும்வேறுபாடாய
பொய்ம்மையாம்பொருள்விவேகமும் புந்தியுள்தோன்ற
இம்மையாசையும்மறுமையிலாசையும்இகந்து
செம்மையாகியகருத்தராய்ப்பரகதிதேர்வார்.



**இதுவுமது**

"வேதஆகமச்சென்னியில்விளைபொருள்அபேதம்
பேதமாகியபிணக்கறுத்துஇருட்பிணியவிழ்த்து
நாதனாகியதன்னையுமென்னையுநல்கும்
போதனாகியகுருபரன்வருவதெப்பொழுதால்".

---

**கீர்த்தனம்-இராகம்-சவாயி-சாப்பு-தாளம்**

சென்மங்கள்தோறுஞ்செனித்துமரித்திடுந்தியேனையாளக்குருபரன்என்
கன்மவுடலையகற்றியருள்செயுங்காலத்தைக்காண்கிலேனீசனே. (க)

ஐம்பொறியர்தக்காணம்புலன்களகற்றியறிவுருநீயெனவே
மெய்ம்பொருள்காட்டிடுந்தேசிகன்றன்னைத்தெரிசிப்பதெந்நாளோயீசனே.

மங்கையர்பொன்புவிவாழ்வைவிரும்பியேமாகாநில்வீழ்ந்துமாளாமல்
சங்கரனைகுருமலர்ப்பாதத்தைத்தானடைந்துய்வேனோயீசனே. (௨)

ஓயாக்கவலையாலுள்ளம்வெதும்பியுழன்றுமதிமயங்கித்திரியும்
நாயேனுக்கந்தப்பாசகங்கிட்டுமோகானறியேன்பரமேசனே. (௩)

பாசமில்கந்தசாமிதுதிசெய்யும்பரமகுருவுருவைக்காண
ஆசைமிகுக்குதுஎன்செய்குவேன்என்றேயாசன்சபையினில்வந்திநின்றார்.

[வாதவூரர், உலகவாழ்வின் நிலையின்மையைக்கருதி மெய்ப்பொருளை நாடிப்பொழுதினைப்போக்கி வரும்நாட்களில் ஒருநாள் பாண்டியன் அரிமர்த்தனன் திருமுன்னர் பரிநிரைகளைக்காக்கும் காவலர் போந்து, அடிவணங்கித்தொழுது நின்றனர்.]

---

**விருத்தம்**

அன்னபோதடு பரிநிரை காப்பவர் அரசன்
றென்னவன்னிரு திருவடி வணங்கிநின் றேதுங்கி
மன்னவாகிழம் பிணிமுடம் மலிபரி யலது
நன்னவாகிய பரியிலை யெனமுன நவின்றார்.

[இம்மொழிகளைச் செவியேற்று]

அருகிருந்ததன் னமைச்சரை நிதியறை திறந்தங்கு
உரியநாலுபத் தொன்பது கோடிபொன் னெடுத்துப்
பரிகள்குற்றமொன் றின்றியே பார்த்ததை வாங்கி
வருவிர் வாதவூர் வள்ளலேய யன்றனன்மன்னன்.

[பாண்டியன் அரிமர்த்தனன் நற்பரிகளை வாங்குவான் வேண்டி வாதவூரரிடத்து அரும் பொன் பெரும்பொருளை அளித்தான்.]

**சிந்து**

விடுத்தானரிமர்த்தனன்-அந்த-விண்ணப்பங்கேட்டுநிதிச்சுமையை
யொட்டகமேலேற்றி-விண்-ணுலாவுஞ்சுந்தரேசர்கோயில்வந்து
பொன்னம்புயத்தடமாம்-நல்ல-புண்ணியதீர்த்தந்தனிற்படிந்து
சித்திவிநாயகரையும்-எழில்-சிதளஅங்கயற்கண்ணியையும்
பரன்சொக்கநாதரையும்-மலர்ப்-பாதம்வணங்கித்துதிக்கலுற்றார்
சம்போசதாசிவனே-சிவ-சாம்பசதாசிவசங்கரனே.

**திருவாதவூரர் சுந்தரரைத் துதித்தல்**

திங்களும் நதியும்கொன்றை செறிந்தசெஞ் சடைமேல்வைத்த
அங்கயற் கண்ணிபாகா ஆலவா யமர்ந்தசோதி
வெங்கனல் தரித்தகையா விண்ணப்ப மொன்றுகேட்டுப்
பங்கம்வா ராமலென்னைப் பாதுகாத் தருள்செய்வீரே.

**சிந்து**

நினக்குநினதன்பருக்கும்-பொன்னை-நேசமுடனுக்கிக்கொள்ளு
[மென
வுரைக்கஈசனுப்பினாற்போல்-ஓர்-உத்தமவர்ச்சகனேரணைந்து
நலமாகநீறளிக்க-இது-நல்லநிமித்தியமென்றுணர்ந்து
விடைபெற்றவ்வீசனிடம்-கோயில்-வெளியில்அன்பரும்வந்தன
சம்போசதாசிவனே-சிவ-சாம்பசதாசிவசங்கரனே. [ரே

[ஆலவாயமர்ந்த அங்கயற்கண்ணி மணாளனை வணங்கி, ஏத்திப் பின்னர், மதுரையினின்று நீங்கித் திருப்பெருந் துறையை நோக்கி வாதவூரர் புறப்பட்டார். வாதவூரர் பெருந் துறை அணுகுமுன் இறைவன் ஆங்கு, ஆசிரியர் வடிவமேற்றுத் தன் மாணவர் புடை சூழ ஓர் பெருங் குருந்தமர நீழலில் வீற்றிருந்தார்.]

---

இறைவன் ஞானாசாரியனாய் எழுந்தருளல்.

**திருவிளையாடற்புராணச் செய்யுள்**

சந்தமறைதீண்டரியதங்கருணையால்ஓர்
அந்தணர்குலக்குரவனாகியடிநீங்கா
மைந்தர்பலர்தம்மொடுபெருந்துறையில்வந்தோர்
கொந்தலர்நெருங்கியகுருந்தடியிருந்தார்.



**கீர்த்தனம்-இராகம்-அடாணா-ஆதிதாளம்**

வந்தாரே கைலைமலைவிட்டுப்-பரமசிவன்-வந்தாரே.

வந்தாரேபூவுலகில்-வாதவூரருக்காகச்
சுந்தரத்திருப்பெருந்-துறையெனும்பதிநோக்கிக்
கந்தரவிடமும்கலைமான்-மழுவும்கங்கை
கடுக்கைதார்பிறைநிலைவான்-பார்வதிதேவி
அந்தமாய்க்கரியுரியும்-அரவாபரணம்என்பும்
விர்தையாய்விடையும்நீத்து-மேதினியில்மானிடன்போல். வந்தாரே.

சூலம்கபாலம்புலித்-தோலாடையும்சிலம்பும்
மேலாம்செவிக்குழையும்-மிளிரும்தமருகமும்
சாலவுமற்றெல்லாம்மறைத்துச்-சிவயோகிகள்
தன்னைப்போல்வடிவந்தரித்து-வெண்ணீறுமணி
கோலமதாகப்புனைந்து-குளிர்ந்தநோக்கமுமுறச்
சீலமாம்வாதவூரரைத்-திருத்தியடிமைகொள்ள. வந்தாரே.

பிறவாநெறியளிக்கும்-பேணுபெருந்துறையில்
உறவாந்தொளாயிரத்துத்-தொண்ணூற்றொன்பதடியார்
திறையகோடிரவிபோலே-குருந்தமர
நீழலின்அருகாலே-யோகாசனத்தில்
இருந்துமறைப்பொருளை-இனிமையுடனேஓதிப்
பொருந்தியசிவஞான-போதம்கையில்விளங்க. வந்தாரே.

பாசஇருள்ஒழித்துப்-பண்பாய்அருட்கண்ணோக்கி
மாசுறும்பிறவியில்-வாராதருளுதற்குத்
தேசுறும்ஆனந்தவுருவாய்-வாதவூரரைச்
செய்வதற்கேஞானகுருவாய்-விண்ணுலகில்வாழ்
வாசவனோடுபிரமன்-கேசவனுமேகொண்டாடப்
பூசிதமாய்க்கந்தசாமி-போற்றிடும்சதாசிவமும். வந்தாரே.

[அமைச்சர் வாதவூரர் மதுரையினின்றும் நீங்கிப் பெருந் துறை நோக்கிப் புறப்பட்டார்.]

---

**கீர்த்தனம்-இராகம்-சஹானா-ஆதிதாளம்**

**பல்லவி**

புறப்பட்டார்வாதவூரர்-மதுரைவிட்டுப் புறப்.

**அநுபல்லவி**

புறப்பட்டார்வாதவூரர்-புரவிதேர்கரிசூழத்
திறப்பட்டவான்வீரரும்-தேசமன்னரும்தாழப். புறப்.

### சரணங்கள்

(க) காடுமலைகள்கடந்து-பாலைவனமுங்
கடிகியேவழிநடந்து
நீடுஞ்சாமரைபோட-நீள்நிலத்தோர்கொண்டாட
பாடுவோர்சூழ்ந்துபாட-பல்லக்கிலேறிநாட. புறப்.

(உ) கொடிசுருட்டிகள்துலங்க-முத்துக்குடைகள்
கோலமுடனேயிலங்க
வெடிகள்பல்லியம்ஆர்ப்ப-விருதுவெண்டையஞ்சேர்ப்ப
இடையிற்கட்டியம்ஏற்ப-எச்சரிக்கையென்றார்ப்ப. புறப்.

(ங) தேவர்முனிவர்நெருங்கித்-தொழுதிறைஞ்சும்
திருப்பெருந்துறைமருங்கில்
பாவலரோடிணைந்து-பல்லக்கைவிட்டிழிந்து
ஆவலாய்மனம்நைந்து-அரனருளைநினைந்து. புறப்.

### சிந்து

அடைந்தார்பெருந்துறையைக்-கண்ணில்-ஆனந்தவெள்ளம் யிர்க்கூச்சுந், தோன்றவுடற்பணிப்பு-மனத்-துக்கம்அகன்றுபர வசராய்ப், போவார்தொழுதிடுவார்-சிவன்-பொன்மயக்கோயிலைச் சுற்றிவந்து, குதிப்பார்கொண்டாடிப்பார்-மனக்-கோரிக்கை யைமுடிக்குங்குரவர், இருக்குமிடமிதுவோ--என--ஏங்கித்தள் ளாடிப்புரண்டழுவார், பெருந்துறையென்பதிதோ--வெனப்- பேசிச்சிவாலயத்துட்புகுந்து, துய்யதொளாயிரத்துத்-தொண் ணூற்-றொன்பதடியார்புடைசூழக்,குருந்தடிவீற்றிருக்கும்-பவக்- குற்றமறுக்குங்குருபரனைக், கண்டார்களைதெளிந்தார்-இரு-கை குவித்தன்புடன்போற்றிநின்று, போதனையதுங்கரத்தில்-தங் கும்-புத்தகமென்னவெனவினவச், சிவஞானபோதமென்றார்- உரை-செய்தாலடியேன்உமக்கடிமை, ஆவேன்எனவாத--வூரர்- அன்புடன்சொல்லியசொற்கேட்டுச், சிவமென்பதுஒப்பற்ற-பொ ருள்-செவ்வியஞானம்அதைத்தெரிதல்,போதமெனப்புகலல்-அந் தப்-பொன்றுப்பொருளில்அடங்கிநிற்றல், என்றார்குருபரனும்- கேட்டுஇன்பமடைந்தார்உளமுணர்ந்து, சம்போசதாசிவனே.

குருபரன் வாதவூரடிகளை வினவுதல்

### விருத்தம்

ஈசனும்வாதவூரர் எழில்முகம்அதனைநோக்கி
ஊசல்வெம்பிறவிபோக்கும் உபாயம்ஒன்றுண்டுகேளாய்
மூசுடல்பொருளொடுஆவி மூன்றையுந்தத்தஞ்செய்தால்
பாசவெம்பிறவிவேரின் பற்றறுத்துஅருள்செய்வோமே.



என்றபோதுஇரு கரங்குவித்துவத்தியேஅன்பர்
இன்றுஎன் ஆவியும் உடல்பொருள்யாவும்நின்வசமாய்
ஒன்றவேஉமக் களித்தனன்உண்மையென்றுஒடுங்கி
நின்றுவேண்டினர் நிமலனும்கிருபையால்நோக்கி.

### சிந்து

பாதஞ்சிரத்தணிந்து-மலம்-பாழ்படத்தம்கரம்சென்னிமிசை
இருத்திவுபதேசஞ்-செய்து-இன்புருவாக்கினர்அன்பர்தமை.
சம்போசதாசிவனே.

திருவிளையாடற்புராணச் செய்யுள்

உபதேசமுறை

சூக்கமாகும்ஐந் தெழுத்தினிற் சுற்றியபாச
வீக்கம்நீக்கிமெய் யானந்தம் விளைநிலத்துய்த்துப்
போக்குமீட்சியுட் புறம்பிலாப் பூரணவடிவம்
ஆக்கினன்ஒரு தீபகம்போல்வரும் அண்ணல்.

[வாதவூரடிகள் உபதேசம்பெற்றபின்னர் குருவைத்துதிக் கின்றார்.]

### திருவாசகம்

#### அருட்பத்து

சோதியேசுடரே சூழொளிவிளக்கே சுரிகுழல்பணைமுலைமடந்தைப்
பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றாய், பங்கயத்தயனும்மாலறியா
நீதியேசெல்வத் திருப்பெருந்துறையின் நிறைமலர்க்குருந்தமேவியசீர்
ஆதியேயடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவேயென்றருளாயே.

#### வாழாப்பத்து

பாரொடுவிண்ணாய்ப் பரந்தஎம்பரனே பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய் சிவபுரத்தரசே திருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன் ஆண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன்கண்டாய் வருகவென்றருள்புரியாயே.

#### செத்திலாப்பத்து

புற்றுமாய்மரமாய்ப் புனல்காலேயுண்டியா யண்டவாணரும்பிறரும்
வற்றியாருநின்மலரடிகாணா மன்னவென்னையோர் வார்த்தையுட்படுத்துப்
பற்றினாய்பதையேன் மனமிகவுருகேன் பரிகிலேன்பரியாவுடல்தன்னைச்
செற்றிலேன்இன்னுந்திரிதருகின்றேன் திருப்பெருந்துறைமேவியசிவனே.

[திருவாதவூரர் தேனினுமினியபாக்களை என்புநெக்குருகப் பாடி இறைவனடிகளைத் தொழுதுநின்றார்.]

திருவிளையாடற்புராணச் செய்யுள்

பழுதிலாதசொல்மணியினைப்பத்திசெய்துஅன்பு
முழுதுமாகியவடத்தினால்முறைதொடுத்துஅலங்கல்
அழுதுசாத்தும்மெய்யன்பருக்குஅகமகிழ்ந்துஐயர்
வழுவிலாதபேர்மாணிக்கவாசகன்என்றார்.

[மாணிக்கவாசகன் என இறைவன் அளித்த திருப் பெயரை பெற்றதும், வாதவூரடிகள் பரிவாங்கக் கொண்டு வந்த பெரும்பொருளைக் கொண்டு கோயில் கட்டத் தொடங்கினார்]

---

கீர்த்தனம்-இராகம்-சாக்கிதாட்டி-ஆதிதாளம்

பல்லவி

திருப்பெருந்துறையினில்-சிவாலயமொன்றைவெகு
திவ்வியமுடன்கட்டினார்சிறப்பாகத். திரு.

சரணங்கள்

(க) மருவிலாக்கோபுர-மதிள்களும்நெருங்க
மன்னும்கர்ப்பஅர்த்த-மண்டபம்விளங்க
அருமைமகாமண்டபம்-அவைகளுந்துலங்க
அணிசபாவசந்தமண்-டபங்களும்இலங்கத். திரு.

(உ) கூபமும்அக்கினி-குளமுமுண்டாகக்
கூடநூற்றுக்கால்மண்டபங்-கோலமதாகத்
தீபசந்திரகாந்தக்கல்-திகழ்அழகாகத்
தேவர்உலகம்போலச்-செய்தார்அன்பாகத். திரு.

(௩) விநோதமானநிலைகள்-விசித்திரங்காணே
விளங்குகம்பம்பொற்சபை-வேலைகள்தானே
அநேகம்படிகதவும்-அழகுடன்வானே
அமரர்மெச்சஆலயம்-அமைத்தார்சீமானே. திரு.

(௪) சுவர்ணக்கலசமெங்குஞ்-சுடரைப்போல்வயங்கச்
சுருட்கொடுங்கைசுவர்கள்-சோபித்தேயியங்க
வர்ணக்கண்ணாடிசாலர்-வரிசையாய்முயங்க
வந்துபார்ப்பவர்கண்ணும்-பூத்துஉளம்மயங்கத். திரு.

[திருவாதவூரடிகள் தான்கொண்டு சென்ற மன்னனது பொருளனைத்தையும் செலவிட்டு வருவதைக்கண்ட அவரது பரிசனங்கள் அடிகளிடம் அணுகினார்கள்.]



விருத்தம்

வந்ததோர்பரிசனங்கள் வாதவூரரையடுத்துத்
தந்ததோர்பொன்னைக்கொண்டுத் தரும்பரித்திரள்வாங்காமல்
இந்தமாதிரிநீர்செய்தால் என்செய்வோம்என்றெல்லோரும்
முந்தவேமதுரைவந்து மொழிகுவார் மன்னன்முன்னே.

கொண்டிச்சிந்து-இராகம்-பைரவி-ஆதிதாளம்

மனுநீதிவழுவாத-அரி-மர்த்தனமகாராசனே தங்களமைச்சர், செய்கையையென்னசொல்லுவோம்--இரு-செவிகொடுத்துநன்றாய்க்கேட்டருள்வீர், பித்தரைப்போல்பிதற்றிக்--திருப்--பெருந்துறைபோனவுடன்மதிமயங்கிப், பரிகளைவாங்காமல்-கொண்டு சென்ற-பணமெல்லாம்கோயிற்பணிபூசைவிழா, அடியார்களுக்களித்து-விசனமில்--லாமற்கெம்பீரமாக இருக்கையிலே, நெருங்கியேயவரிடத்தில்-நாங்கள் நிகழ்த்தினோம்பரிவாங்கத்தந்தபொருளைக்,குதிரைகள்வாங்காமல்-ஈசன்-கோயிலைக்கட்டிமுடித்தகாரணமென்ன, கொற்றவர்இதையறிந்தால்-நம்மைக்கோபித்துக்கொள்வார்களெனப்புகன்றோம், ஒன்றும்பேசாமல்-அவர்-உள்ளங்கரைந்துகண்ணில்நீர்ததும்பி, அழுதார் புலம்பிநின்றார்-பெருந்துறை-பரமேச ஆட்கொண்ட-அருமருந்தே, யென்றுபலவாறாய்-ஈசனை-யேற்றினார்கரங்கூப்பிப்போற்றிநின்றார், எங்களுரையைக்கொள்ளார்---பேசினால்---இகழ்ந்திடுவார்பரனைப்புகழ்ந்திடுவார், விடைகொடும்எனக் கேட்டோம்--போம்போம்---விடையென்ன போவதற்குத்தடையென்ன, என்றார்வெறுப்புடனே---வார்த்தைகேட்-டிதயம்கலங்கிநாங்கள்ஒன்றுகூடி, வந்தோம்திருச்சமுகம்--மந்திரி--வகையென்னசொல்வாரோபரிகளுக்கு, அறியோம்நாங்கள்எந்தாய் அரசே.

[என அரிமர்த்தனனிடம் வாதவூரரோடு துணைபோய குடிகள் கூற]

விருத்தம்

பௌவமார்புவியையாளும் பாண்டியனிதனைக்கேட்டுக்
கொவ்வையங்கனிபோல்கண்கள் கொதித்துஉளம்வேறுபட்டுச்
செவ்வையாய்ப்பரிவாங்காத சேதியும்வாதவூரர்
இவ்விடம்வரவும்ஓலை யெழுதிதூதனுப்பினானே.

[கொற்றவன் தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதர்கள், திருப்பெருந்துறையையடைந்து அடிகளைக் கண்டு வணங்கிநின்று கூறுகின்றார்கள்.]

### கீர்த்தனம்-இராகம்-பியாகு-மட்டியதாளம்

தூதர்கள் சொல்லல்

#### பல்லவி

வந்தனமையா-வந்தனமையா-பிரமராயரே
நல்ல-பிரமராயரே.

#### அனுபல்லவி

(க) எந்தையாம்நமது-எசமான்மன்னன்-எழுதியநிருபம்
சிந்தைமகிழ்வாய்-இதனைவாங்கிச்-சேதியறிவீரே-
இதன்-செய்கைதெரிவீரே.

வாதவூரர் சொல்லல்

(உ) ஆரடாதூதா-நமதெசமானென்று-அழுத்தமாய்ப்பேசுருய்ப்
பாரடாவெல்லா-வுயிர்க்கும்எசமான்-பரமசிவனடா-
அவர்-பாதம்பணியடா.

தூதர்கள் சொல்லல்

(ங) மன்னவன்கோபம்-மீறுமுன்னமே-மதுரைபோகவேணும்
என்னதாமதம்-எழுந்துவாரும்-எங்கள்முன்னாலே-
வாரோம்-எழுந்துபின்னாலே.

வாதவூரர் சொல்லல்

(ச) ஒருவருக்கும்நான்-அடிமையல்ல-வுங்கள்மன்னனுக்கடிமை
திரிபுரம்பொடி-செய்தயீசன்-திருவடிக்கடிமை. [யோ
சிவன்-அடியாருக்கடிமை.

[இவ்வாறு கூறிப்பின்னர் கொற்றவன் தன் திருமுகத்தைப் பெற்று, இறைவன் திருமுன்னர் நின்று படிக்கத் தொடங்கினர்]

### திருமுகம்

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சீருலவும் மதுரையாள் அரிமர்த்ன பாண்டியன்
திறமையுடன் எழுதும் நிருபம்
தென்னவன் பிரமரா யப்பெயர்கொள் மந்திரி
செவ்வையுடன் இனிதுகாண்க

பாருலவும் நாலுபத் தொன்பதாங்கோடி பொன்
பரிவாங்கி டக்கொடுக்கப்
பயமிலா மற்பெருந் துறையேகி பொருளெலாம்
பரன்ஆல யம்முடித்துப்



பேருலவும் அன்னதா னம்பூசை திருவிழா
பெரியவர்க ளுக்களித்துப்
பேசாமற் பிரபல்ய மாகநீர் வாழ்கின்ற
பெருமையும் அமைச்சுரிமையும்

ஏருலவும் அரசனைக் காக்கும் நின் கடமையும்
யாவும்நன் ருய்உணர்ந்தேன்
இக்கணம் நிருபமது கண்டுதடை சொல்லாமல்
இவ்விடம் வருகுவீரே

[திருமுகத்தைப் படித்ததும் பின்னும் சொல்லுவார்.]

### திருவிளையாடற்புராணச்செய்யுள்

அறுசீரடியாசிரியவிருத்தம்

என்னுயகனே பொன்னுடர் ஏறேயேறு கொடியுயர்த்த
மன்னுதென்னுபெருந்துறையெம்மணியேவழுதிபொருளெல்லாம்
நின்னுலயத்தும்நின்னடியாரிடத்துஞ்செலுத்துநெறியளித்தாய்ப்
பின்னுனவனுக்கு என்கொண்டு பரிமாச்செலுத்தப் பெறுமாறே

[என வாதவூரடிகள் இறைவனிடம் முறையிட்டு வருந்திய போது இறைவன் மாணிக்கவாசகருக்கு மனம் அமைதியுறக் கூறுகின்ருர்]

### இறைவன்சொல்லல். விருத்தம்

மனமிகத்தளரவேண்டாம் மாணிக்கவாசகா!இக்
கனமுறும்மாணிக்கத்தைக் காவலனிடங்கொடுத்து
முனநின்று ஆவணியின் திங்கள் மூலத்திற்பரிகள்கூட்டத்(து)
இனம்இங்குவருமென்றேநின் ஏந்தல்பால்உரைப்பாய் என்ருர்

### கீர்த்தனம்-இராகம்-மோகனம்-ஆதிதாளம்

மாணிக்கவாசகர் சொல்லல்

#### பல்லவி

நாதா-குருநாதா-மலர்பாதா-வரந்தாதா நாதா

#### அநுபல்லவி

(க) ஆதரவுவேறில்லை-அரிமர்த்னபாண்டியன்எனை
வாதனைசெய்யாமல்ஆளும்-வானவாவுமைப்பணிந்தேன்

இறைவன் சொல்லல்

(௨) அப்பா-உனக்கொப்பார்-உண்டோயிப்பாரில்லதப்பா
மெய்ப்புகழ்மாணிக்கவாசா-மேவிடாதுதுன்பம்மன்னன்
ஒப்பமாணிக்கத்தைத்தந்தோம்-உவந்துநீபோய்வருவாய்

மாணிக்கவாசகர் சொல்லல்

(௩) ஈசா-செகதீசா-பரமேசா-கைலைவாசா
வாசாவும்மைபிரியமனம்-வல்லையேநானென்றுசெய்வேன்
பாசங்கள் அகற்றியாண்ட-பரமதயாநிதியே- (நாதா)

இறைவன் சொல்லல்

(௪) மிஞ்சி-மனந்துஞ்சி-மிகவஞ்சி-ஏதென்கெஞ்சி
அஞ்சாதேவுனக்கெவ்வித-ஆபத்துவந்தாலுங்காப்போம்
கொஞ்சமுங்கலங்காதுள்ளம்-கூசாமற்போய்வருவாய்

[பின்னர் ஆண்டவனின் அடித்தாமரையை வணங்கிநின்று, ஆணைபெற்று ஆலவாய் நோக்கிப்புறப்பட்டார்.]

## விருத்தம்

அனுப்பினவாதவூரர் ஆலவாய்நகரம்வந்து
பணிப்புறும்மனத்தராகிப் பாண்டியன்தனை வணங்கி
வனப்புறும்மாணிக்கத்தை வள்ளல்மன்னிடத்தில்ஈந்தே
அனைத்தும்ஆவணிமூலத்தில் அசுவங்கள்வரும்என்றாரே

[அடிகள், இறைவன் ஈந்த மணியை, பாண்டியன் கையிற் கொடுத்து, பரிகள் யாவும் ஆவணியின் மூலநாளில் வருமெனக் கூறியும், மன்னன் அவற்றைப் பொருட்படுத்தாது வாதவூரரை நோக்கி]

இராகம்-இந்துஸ்தான்காப்பி-ஆதிதாளம்

பாண்டியன் கேட்டல்

(௧) தென்னவன்பிரமராயா-பொன்னைக்கொண்டென்செய்தீரையா
தின்னும்பரிகள்செவ்வையா-இன்னமதுவாங்கலையா,
சொன்னசொற்றவறாததுரையா.

வாதவூரர் சொல்லல்

(௨) பாண்டியமகாராசனே-வேண்டியகுதிரைநானே
ஈண்டுபெருந்துறையிற்றானே-ஆண்டவாவிட்டுவந்தேனே
காண்டிவருமென்கோமானே.



பாண்டியன் கேட்டல்

(௩) எப்போகுதிரைவரும்-ஒப்பிலாமந்திரிநீரும்
தப்பிதமில்லாமல்கூறும்-இப்புவிநானாளப்பாரும்
கப்புமனக்கவலையைத்தீரும்.

வாதவூரர் சொல்லல்

(௪) மேவுநாள்போதாதாலே-ஆவணிமூலம்அதிலே
தாவும்பரிகள்முன்னாலே-பூவுலகில்வருவதாலே
காவலனேபாருங்கண்ணாலே.

திருவிளையாடற்புராணச் செய்யுள்

அரைசியல்அமைச்சநீதி ஆய்ந்தறங்கட்குநாங்கள்
உரைசெய்வதெவன்நீர்செய்வதொன்றும்நன்றுவதில்லை
விரைசெறிதாரார்க்குஇன்று வெம்பரிவருவதாக
வரையறைசெய்தீர்நாளை என்சொலவல்லீரையா.

வாதவூரர் சொல்லல்

திருவிளையாடற்புராணச் செய்யுள்

சுற்றமுந்தொடர்பும்நீத்தேம் துன்பமும்இன்பமற்றேம்
வெற்றுடல்மானம்தீர்த்தேம் வெறுக்கைமேல்வெறுக்கைவைத்தேம்
செற்றமுஞ்செருக்குங்காய்ந்தேம் தீவினையிரண்டுந்தீர்ந்தேம்
கற்றைவார்சடையான்கோலம் காட்டிஆட்கொண்டஅன்றே.

தந்தைதாய்குரவன்ஆசான் சங்கரன்கிராமைசபெண்டிர்
மைந்தர்பல்லுயிருஞ்சுற்றமாம் சிலர்ஈசனன்பர்
அந்தமில்பிறவியேழும் அடுபகையென்பதோர்ந்தேம்
எந்தையார்கருணைகாட்டி எம்மையாட்கொண்டஅன்றே.

ஊரெலாம்அட்டசோறு நம்மதேஉவரிசூழ்ந்த
பாரெலாம்பாயல்துன்னற் கோவணம்பரிக்கும்ஆடை
சீரெலாஞ்சிறந்தசாந்தம் தெய்வநீறுஅணிபூண்கண்டி
நீரெலாஞ்சுமந்தவேணி நிருத்தன்ஆட்கொண்டஅன்றே.

## எழுசீரடியாசிரிய விருத்தம்

இறக்கினும்இன்றேஇறக்குக என்றும்இருக்கினும்இருக்குகவேந்தன்
ஒறுக்கினும்ஒறுக்கஉவகையும் உடனேஊட்டினும்ஊட்டுகவானில்
சிறக்கினுஞ்சிறக்க கொடியநிரகஞ்சேரினும்சேருகசிவனை
மறக்கிலம்பண்டைப்பழவினைவினைத்தால் மாற்றுவார்யாரெனமறுத்தார்.

## விருத்தம்

பரிகள்வர இருநாளின் முன்னம்தென்ன பாண்டியனும் தனித்திருக்குஞ்சமயநோக்கி; அரியகழல்வணங்கிஓர் அமைச்சன் ஆங்கே 'அமைச்சர்தென்னவன்பிரமராயரென் போர்; பொருள்களுக்குப் பரிகளொன்றும்வாங்கிடாமல் பொன்னிவளமுறுஞ் சோழதேசமெய்தி; உரியபொன்னைச் சிவனடியார்க்குஅளித்துத் தங்கள்உளங்களிக்கப்பரிவரும்என்றுரைத்தார்' என்றான்.

## அரசன்சொல் விருத்தம்

'ஆட்டாவேவுகாரா அறிவிப்போம்உனக்கிப்போது
சேரடாவேகமாகத் திருப்பெருந்துறையைச்சுற்றிப்
பாரடாபரியின்கூட்டம் பரவியேயிருந்தால்வந்து
கூறடாசீக்கிரத்தில்' என்றனன்கூர்வேல்மன்னன்.

## விருத்தம்

மன்னவன்சொன்னமாற்றம் மனந்தனில்உட்கொண்டேகிச்
சொன்னவாறெங்குந்தேடிச் சூழ்பெருந்துறையதாகும்
அன்னதோர்பதியும்பார்க்க அரும்பரியிலாமையாலே
துன்னவேவேவுகாரர் தோன்றல்முன்னுரைத்தார்அன்றே.

### வேவுகாரர்கள் அரசனிடஞ்சொல்லல்

### கீர்த்தனம்-இராகம்-ஜாவளி-வலசிதேமெட்டு-ரூபகதாளம்

**பல்லவி**

இராசாதிராச-மன்னா-ராசகுலதிலகமே இராசா.

**அனுபல்லவி**

(க) தேசாதேசமெங்நாளுஞ்-செங்கோல்செலுத்தியாளும்
வாசமலரணிதோளும்-மன்னவாவந்தனம்கேளும் இராசா.

(உ) நாடுநகரந்தேடி-நற்சோலைதோப்புங்கூடி
காடுமலையும்ஓடி-கால்நோவப்பார்த்தோம்வாடி இராசா.

(ங) திருப்பெருந்துறைதங்குஞ்-சேர்ந்தபதிகளங்கும்
பரித்திரளென்பதிங்கும்-பார்வேந்தேயில்லையெங்கும்-

(ச) புதிதாகக்கோயிலொன்று-பொன்மலைபோற்கண்டோம்நின்று
அதிசயமிதையன்று-ஆண்டவா இல்லைஇன்று இராசா.



## விருத்தம்

தேசுறுவாள்கரத்துஏந்திக்கொலைகள் செய்யுந் தீரர்களை நோக்கியொன்றுசொல்வான்மன்னன்; 'காசினியில்அபகீர்த்தி வைத்தஇந்தக்கள்வனும்எமதமைச்சன்கொடுத்தபொன்னை; மோசமதுசெய்துவிட்டான் ஆகையாலே முடுக்கியேதண்டித்துப் பொருளையெல்லாம்; யோசனைகள்செய்யாமல்வாங்குவீர்' என்றுஉலகையாள்முடிவேந்தன்உரைத்திட்டானே.

## விருத்தம்

பாதகத்துக்கஞ்சாதகறுகணாளர் பணிவாதவூரர்தமை யடுத்துநோக்கி; 'நீதியுறும்எங்கள்மன்னன்பரிகள்கொள்ள நேராகக்கொடுத்தபொன்னைவாங்கச்சொன்னார்; ஊதியத்துக்கென் சொல்லுகின்றீர்' என்ன உத்தமனும்பேசாமலிருந்ததாலே; வாதனைகள்செய்வதற்குமனந்துணிந்து வாதவூரரைநெருக்கி வளைந்திட்டாரே.

### கடுக்கா-இராகம்-நாதநாமக்கிரியை-அடதாளம்

படபடபடபடபடபடவெனவே - திடுதிடுதிடுதிடுதிடுதிடுவெனவே - கிடுகிடுகிடுகிடுகிடுகிடுவெனவே - ஆர்த்தார் - கண்ணிலுல்பார்த்தார் - தேகமும்வேர்த்தார் - ரோஷத்தைச்சேர்த்தார் மிகநடந்தார் - மானங்கடந்தார் வந்துதொடர்ந்தார் - எங்கும் அடர்ந்தார் - அந்தவுத்தமவாதவூரரைப்பிடித்துக் - கொடுமையாகியவெயிலில்நிறுத்திக் - கையுங்கால்களுங்கிட்டிகளார்த்துக் - கல்லைக்கரம்நுதல்எற்றியேதுன்பம்-செய்தார் - கண்கள்சிவக்க-வேர்வைதுளிக்க - மனம்பதைக்க - உடல்துடிக்க - மிகுதேவரும் பூவுலகோர்களும்வருந்தப் - பாவிகளாகியபாதகர்கூடி — இவ்விதந்தண்டனைசெய்தாரே- வாதவூரரை-இவ்வித.

### வாதவூரர் பரமசிவத்தைத் துதித்துப்புலம்பல்

### திருவிளையாடற்புராணச் செய்யுள்

பொங்குஞ்சினமடங்கல்போன்றுருத்துவெங்கூற்ற
மங்கும்புரியாவருந்துன்பத்காழ்ந்துநான்
மங்கும்படியறிந்தும்வந்து அஞ்சல்என்கிலையால்
எங்குஞ்செவியுடையாய்கேளாயோஎன்னுரையே.

### கீர்த்தனம்-இராகம்-உசேனி-ரூபகதாளம்

(க) சச்சிதானந்தசர்வபூரணா- சிவ- சாம்பசிவா
தயவுவைத்திந்தத்- தருணமாளுவாய்

(உ) நம்பும்அடியார்துன்பமகற்றிடும்- வேத- நாதகீதா
நாயினேன்முகம்- நாடிப்பாருமே

(ங) வேதனைப்படவினையின்பயனோ- மலர்- வேதன்முன்னாள்
விதித்தசெயலோ- விடையாய்நின்செயலோ

(ச) தவிக்கவிட்டுப்பார்ப்பதழகோ- யிது- தர்மமாமோ
தளரல்நின்செவி- தன்னிலேறலையோ

(ரு) சமயமறிந்துசற்றுவாருமே- கந்த- சாமிபோற்றும்
சாம்பசிவமே- சார்பொன்றில்லையே

## விருத்தம்

புலம்பிடும்வாதவூரர் புல்துயர்அகற்றஈசன்
நலமுறநரிகளெல்லாம் நல்லதோர்புரவியாக்கிப்
பலமுறுஞ்சிவகணத்தைப் பாகராய்அதற்கமைத்துத்
தலமுறுதுருக்கராகத் தகும்படிப்பணித்தாரன்றே.

## இதுவுமது

ஆரியதேசத்துள்ள அசுவவர்த்தகரைப்போலப்
பேரிகைமுழங்கத்தாமும் பெரியராவுத்தராகி
வீரியவுடைவாள்தாங்கி வேதவெம்பரிமேல்வந்த
நாரியோர்பாகன்மற்றோர் நடக்கையும்எழிலும்சொல்வாம்.

## பரிவீரர்களின் அலங்காரம்

### கீர்த்தனம்-இராகம்-பஞ்சசாமரம்-ஆதிதாளம்

தூக்கியார்த்தசெம்பட்டினர் சுரிகையர்தொடுத்ததோல்
வீக்குகாலினர்இரும்பு மேவுசட்டைப்போர்வையர்
நோக்கும்வெருட்பார்வையர் நுதலிற்புண்டரமடி
தாக்கிஆர்ப்பெழுநகையர் தாவழற்சினத்தரே, (க)

வட்டத்தோல்வரிபுறம் வதிந்தசைய்க்கூர்மைவாள்
தொட்டகையினர்சிலர்கள் தோமரஞ்சுழலவே
விட்டகையினர்சிலர் வெரிநிடைக்கணைகள்சேர்
புட்டில்வீக்கிவில்லணி புயத்தினர்சிலர்களே, (உ)

பலநிறமணிக்கலன்கள் பவளமாலைபுயமுற
ஒலிசெய்தண்டைதொடிகுழைகள் உற்றபுண்டரநுதல்
பொலிவுமேவிச்சாய்ந்தகொண்டை பொன்னிறத்தமேனியும்
கலியகற்றிடக்கருதிக் கருணையாலெழுந்தாரே, (ங)



சிவகணங்கள்அலங்கரித்துச் சிவபிரானைச்சூழவே
புவியோர்போற்றுமீசன்வேதப் புரவிமிசையேறியே
கவனமாய்க்குதிரைவாரைத்தன் கைச்சவுக்கால்தீண்டிமன்
பவமறச்செலுத்தினார்அப் பாண்டியன்களிக்கவே, (ச)

## விருத்தம்

தாண்டிடற்குஅரியசோதி துய்யபொற்பதம்நினைந்து
வேண்டிடும்வாதவூரர் வேதனைபகற்றியாளக்
காண்டிடற்குஅரியவள்ளல் கவனவாம்பரிசெலுத்திப்
பாண்டியன்நாட்டைநோக்கிப் பரிவரும்விதஞ்சொல்வோமே

## பரிகள்வருகிற விருத்தம்

வரைகள்பொடிபடவும்எழுகடல் அதிரதிசைகள்உடுவான்
இரவிமதிசுழலவே, உரகன்உடல்நெளியபுவியசைய திகிலடைய
நரருபர்வெளிசெந்தூள்பரவவே, சரணமுறும்எழில்சிலம்பணி
மணிகள்பளபளெனதண்டையதுகலகலெனவே, பரிகள்பலநட
னமிகதிடுதிடெனவிரைவினொடுபாண்டிநகர்குறுகிவருதே

### கீர்த்தனம்-இராகம்-பிலகரி-ஆதிதாளம்

### பல்லவி

பரிகள்வெகுவேகமாய் மதுரைநகரைநோக்கிப்
பாண்டியன்மகிழவருகுதுகோலமாய்

### அனுபல்லவி

(க) வரிசையாய்முத்துமாலை வழங்குபொன்மணிதுன்ன
வாகாய்மணிப்பதக்கம் வதிந்துபளபளென்ன
தெரியக்கலிக்கிகுஞ்சந் திகழ்முகபடாம்மின்ன
சீனிமுதுகிற்சூலுந் திறமாய்வயங்கவன்ன

பின்முகே. தேசசிலம்பொலிவீசிடுதண்டைகள் திறனுறு
காலினில்கலகலகலவென, சென்றுகனைத்தகல்வாய்நுரைவெளி
வர செங்கரம்இசைபுனைலகான்சவுக்கும்மா-தேவரும்-பரிவீரர்
அநேகரும்ஆகவே-பரியேறிநடத்திட - திக்குகடல்கிரிமிக்குடும
திரவிதிண்புவிசேடன்எல்லோரும்நடுங்கிட, குதிரைகள்திமிதிமி
குகுந்தகுகுந்த- தகதரிகுகதரிகுகுதகசெந்தரி - தத்தத்திமிகிட
தரிகிடதொங்கிட-தாகிடகிட தகததிங்கணத்தோமெனப்- (பரி)

(உ) அண்டபகிரண்டமும் அசைந்துமிகப்பெயர
அட்டகரியும்இடம் அகன்றுநிலைதயர
மண்டலம்எண்டிசையும் மன்றயச்செந்தூளுயர
மாதர்கள்ஆடவர்கள் மலங்கியுள்ளமயர.

பின்முடுகு. மாமலரோதிமனே அரியோருனி மன்னியில ங்கிடும்அதிரவியோமலர், மல்குதருக்கரசோகரிமுகவனேமங்கை குறப்பெண்மருங்கமர்பங்கனே-மாரனே- கந்தசாமிதொழும்புலி -யூரனே, அறியோமெனமதுரைவாழ்மன்னனோடுஅம்புவியோர் கள்உளங்கள்மருண்டுயிருண்டுசெழுன்றுகலங்கிட-குதிரைகள்திமி திமி குகுந்தகுகுந்த - தகதரிகுகதரிகுகுதகசெந்தரி-தத்தத்திமி கட தரிகிடதொங்கிட-தாகிடகிடதக ததிங்கணத்தோமெனப்-

(பரி.)

[பரிகள் மிகச்சிறப்புறக் கூடற்புறத்தில் வருவதையறிந்த பாண்டியன், உடனே அடிகளை, அழைத்துவர ஆட்போக்கினன்.]

கடுக்கா

வாரார்--வாரார்--பாண்டியன்முன்--வரவழைக்கவாதவூரர் தீராப்பவநோய்தீர்த்தாண்ட-தேசிகரைத்தாள்வணங்கி--அங்கம் பரவசமாகி ஆருமைகொண்டுஉளமுருகிச்--செங்கைகுவித்துச்செ ன்னிமிசை--சிதளநீர்கண்ணிழியப்--பாண்டிமன்னன்மனமகிழப் பங்கயச்சேவடியதனை-வேண்டும்அடியேன் துயர்களையவிட்டீரோ வெம்பரிகள்தனைச்சித்தமிரங்கயித்தனைநாள்சென்றதோ இவ்வே ளையின்மேல்---மெத்தவருத்தமுற்றேனை-மெலியாமல்வந்தாளு தற்குப்-பரிவீரராயெழுந்துவந்த- பரசிவமேநின்பெருமை-அரியு ம்அயனுங்காணார்கள்--அடியேன்காணவுமெளிதோ--வென்றுபல வாய்த்துதித்தேத்தி-இறைவன்பாண்டியனிடமாம்--இன்றெனக வலைதீர்ந்ததெனை-இயம்பியின்பமுடன்நடந்து.

[பாண்டியன் அரிமர்த்தனன், வாதவூரடிகளை அனுக]

விருத்தம்

குதிரையின்வரவுகண்டு கொற்றவன்அமைச்சசைநோக்கி
மதியிலாது இழைத்ததீங்கை மனம்பொறுத்தாவீரென்று
நிதிமணிக்கலன்கள் ஆடை - நிறையமர்நிரிக்களித்துப்
பதிவையைக்கரையில்மந்திரிபக்கம்வீற்றிருந்தான் அன்றே

கீர்த்தனம்-இராகம்-பதம்-தாண்டவநித்தியகரிகஜானனவென்றமெட்டு

பல்லவி

வந்தாரேசிவபெருமான்- பரிகள்கொண்டு- வந்தாரே-



அநுபல்லவி

(க) மந்தகாசமாய்அரி மர்த்தனன்பணியச்
சிந்தையுட்சினம்தணியப். பரிகள்.

(உ) தொல்லையைநீக்கித் தொண்டரைக்காக்கப்
பல்லோர்களும்பார்க்கப். பரிகள்.

(௩) பரிவீரர்அழகைப் பார்த்தோர்கள்மயங்கத்
தரியாதுள்ள மும்தயங்கப். பரிகள்.

(௪) மதுரையிலுள்ள மாந்தருஞ்சகல
புதுமையீதெனப்புகலப் பரிகள்.

(௫) கருணாகரநிதி கந்தசாமிதுதிக்கத்
திருமால்அயன்மதிக்கப். பரிகள்.

திருவாதவூரர் புராணச்செய்யுள்

மன்னவனும்இங்குஇவர் வரும்தகைமைகண்டே
தன்னுளம்மகிழ்ந்துஇரு நடங்கண் இமையாமல்
அன்னமெனுமூர்த்திநெடு மால்அரனையல்லாது
இன்னஎழில்யாவருளர் என்றுஅதிசயித்தான்.

[குதிரைக்குத்தலைவாரரென்று பாண்டியன்கேட்க யானறியேனென்றார் யாரையுமறியவல்லவராகிய வாதவூரடிகள்.]

வாதவூரடிகள் பரிவீரரைத் துதித்தல்.

கீர்த்தனம்-இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

(க) பாரின்முன்னாட்செய்ததவப் பயனோர்வடிவாய்ப்
பரியின்மீதுவரவுஞ்செய்த பாக்யமோமுடிவாய்ப் பாரின்

(உ) கேசவனும்மலர்அயனுங் கீழ்மேலும்ஓடிக்
கிட்டாப்பரம்வந்ததே கிழனைத்தேடிப் பாரின்

(௩) எண்ணியபடிமுடித்த இன்பவெள்ளமே
ஏழைமீதிற்கிருபைவைத்த வெண்கைவள்ளலே பாரின்

(௪) அன்பர்களுக்கெளியவன்என்று அருமறைமுழங்கும்
இன்பமாகக்கேட்டதன்றி இதுபோற்கானேன்எங்கும்

(௫) சந்தமுங்கந்தசாமி சாற்றுங்காளா
அந்தமாய்இவ்வேளைவந்த அரிவைபங்காளா பாரின்.

### விருத்தம்

மன்றல்மாறனும் அமைச்சரை மகிழ்ச்சியாய் நோக்கி
வென்றிவாம்பரி நடத்திட வினவும் என்றுரைக்க
நன்றெனப் பரித்தலைவர் முன்னவில நன்மறுகில்
கன்றியபரித்திரள்களை நடத்தினார் களிக்க.

### இறைவன் பரிகளை நடத்திக்காட்டல்

**கீர்த்தனம்-இராகம்-இந்துஸ்தான்காப்பி-ஆதிதாளம்**

**பல்லவி**

(க) பரிகளை நடத்தியவிதஞ் சொல்லப்போமோ
பரமதயாநிதி பரன் செயலாமோ — பரிகளை
(உ) வீதிகள் எங்கும் பரி விரைந்து திடுதிடென
வெருண்டு செல்லப் பூமி விரிந்து கிடுகிடெனப் — பரிகளை
(ந) செந்தூள் பரவிலங்கித் திசைகள் எங்கணும் மூடச்
செகத்தோர் கண்டு வியந்து சிந்தை மயங்கி நாடப் — பரிகளை
(ச) பார்த்தவர் கண் உள்ளமும் பரிவீரரிடம் சென்று
பாவைபோல் இருந்தனர் பாரினுள்ளோர்கள் நின்று — பரிகளை
(ரு) கந்தசாமி பணியும் கருணையன் மகிழக்
கந்துகத்தை நடத்திக் காட்டி எல்லோரும் போற்றப் — பரிகளை

[பரி வீரராம் இறைவன், பரிமாக்களைச் சிறப்புறப் பாண்டியன் முன்னிலையில் நடத்தியபோது, மணிவாசகர் துதிசெய்கின்றார்.]

### திருவாசகம்

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரை எல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையான்
அரியபொருளே! அவிநாசியப்பா! பாண்டிவெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதி! செய்வது ஒன்றும் அறியேனே

[பாண்டியன் பரிவீரர்களை நோக்கி "உங்கள் தலைவன் யாவன்?" என அவர்கள் திருமறையாகிய புரவியில் வீற்றருளும் அவனைச் சுட்டியபோது பரமனது கருணைநாட்டம் பெற்று அரிமர்த்தனன் உள்ளம் மாங்கி பரித்தலைவனை நோக்கிக் கை குவித்தான். பின்னர் மறைப்பு நீங்கப் பாண்டியன் கூறலுற்றான்.]



சென்னை-600 005
170113

**துக்கடா—ரூபக தாளம்.**

வயமா வீரர் தமை வாழ்த்தி-வீறு-வணங்கினேன்
இருநகையும் [illegible]
இயல்பறியாமலே நோக்கி-மன்னர்க்கு-இது ஒழுங்கா? என்றான்
என்ன நம் கீர்த்தி.

[நாணத்தால் விழுங்கப் பெற்றுள்ள மன்னவனை இறைவன் நோக்கி, 'பரிகளின் இலக்கணங்களை நோக்குதி' யெனப் பாண்டியன் அசுவநூல் வல்லுநரை அழைப்பிக்க, அவர்கள் பரிகளை நன்கு ஆய்ந்து கூறுகின்றனர்]

### திருவாதவூரர் புராணச் செய்யுட்கள்

"சிரமதனில் இரண்டு, செழும் தனைப்பில் நான்கு, சிறந்த உரம்தனில் இரண்டு, நுதல்மேல் ஒன்று;-நாவமிசை நின்றசுழி ஒன்றிரண்டுலவிய சுரைக்கு சுழி குறையதாகி;-நரி, செருகு, கருங்காகம், அலகை, ஓரி, ஞாளி, செழுங்கேழல் எனும் குரல் இன்றாகி;—விரவு பெருந்திரை வேலை, மங்குல், சங்கம், விடை, முழவம் போல்முழக்கம் மிக உண்டாகி.

"பங்காளன், சாரங்கன், கங்காநிலன், பொன்வழகன் கொங்காளன் சன்னமப்பான்; குங்குமச்சோரன், கரியாநிலன், சாரன், குலவு மல்லான், மாங்கிசங்கநான், அல்லன், பொல்லான்; தங்கு கருங்கால் பப்பான் என்று கூறும் தன்மையுள பல்நிறமும் புனைந்த சாதித்:-துங்கமிகும் பரி இவை" என்று அவற்றின் தன்மைத் தொன்மை யுரைத்து அரசனை முன் தொழுது நின்றார்.

[தென்னவன் இவற்றைக் கேட்டதும் வயமாவீரரைக் "கயிறு மாறிக் கொடும்" எனக் கூறி]

G28:417Σ
1122

### திருவிளையாடற் புராணச் செய்யுள்

கொத்து அவிழ்தார் நறும்சாந்தம் கொண்டு செழும்புகை தீபம் கொடுத்துப் பூசை; பத்திமையால் செய்து இறைஞ்சி எதிர்நிற்ப ஆலவாய் அப்பரனை நோக்கிக்; கைத்தலம் தஞ்சிரம் முகிழ்த்து 'வாழி' எனப் பரிகொடுத்தான் கயிறுமாறி; முத்தொழிலில் மூவராய் மூவர்க்கும் தெரியாத முக்கண்மூர்த்தி

[பரித்தலைவனாய பரமன் பாண்டியனை நோக்கி, "தென்னவ! நீவிர் அளித்த பொருளினும் பன்னூறு மடங்கு மதிப்பு மிக்கப் பரிகளைத் தந்தோம். இவற்றை நன்கு பார்த்துக் கொள்க! இனி இவை எவ்வாறாயினும் நமக்குள் தொடர்பு இல்லை. இவை நின்னுதனவெலாம் நின்று நுழையா இடமெங்கும் நுழையும்

தன்மையன. இவை பழைய பரிகளுடன் இணைக்கப்படின் நலமாம்" எனத், தென்னவன் பரமனது உட்கருத்தை உணராது இசைந்து, பரித்தலைவனுக்குப் பரிசிலாக விலைமதிக்க முடியாத ஓர் பொன்மணி ஆடையை வழங்க, அஃதை இறைவன் தனது சவுக்கினுல் ஏந்தி புன்னகை அரும்ப அதைக் கண்ட வேந்தன், தன்னைமதியாது செய்தாரே என்று வாதவூரிடம் சினந்து கூற, அதற்கு அவர் 'இம்முறையே அந்நாட்டினரின் உயர்ந்த தன்மையது' எனக்கூற அரிமர்த்தனன் அகமகிழ்ந்தான். பின்னர் பரித்தலைவன், மன்னனிடம் விடைகொண்டு தம்பவர் புடைசூழ மறைந்தனன்.]

திருவிளையாடற் புராணச் செய்யுள்

இருமைக்கும் துணையாய் நின்ற இருபிறப்பாளர்க்கு எற்ப
அருமைத்தாம் சிறப்புநல்கி அவர்இடத்து அவரைஉய்த்துப்
பருமத்தயானை வேந்தன் பகல்கதிர் வானத்துஊர்தி
வரும்அப்போது எழுந்து செம்பொன் மாடநீள் கோயில்புக்கான்.

[அன்று இரவே பரிகள்யாவும் நரிகளாகித் துன்பம்செய்தன]

நரிகள் பேசும் சைகை—இராகம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி,

வந்த பரி நள்ளிருட்போது வந்தெய்த-மிகு-வலிமையதாகவே வந்த

அனு பல்லவி.

(க). சந்திரசேகரர்—சமர்த்தினுல் பரிகள்
நந்தல் இலாத கூறு—நரி வடிவம் ஆகின. வந்த

(உ). பகல் எல்லாம் சிவகணப்—படை சுமந்தலுத்தோம்
இகல்சங்கிலித் தாம்பினுல்—இடர் அடைந்தோம், என வந்த

(ந). காட்டில் வசிக்கும்போது—கவலையோ இல்லை
தாட்டிக வீரர்களால்—சவுக்கடிபட்டோம், என வந்த

(ச). உடல் வளர மாமிசம்—உண்ணுவ தொழிந்து
கடலை கொள்ளு பருப்பு-நறுக்கபுல்உண்டோம், என வந்த

(ரு). தலம்புகழ் காவலன்—தமர் கண்டால் நம்மைவிடான்
புலருமுன்னம் காட்டினில்—போவோம் எனப்பேசின. வந்த

(சா). பந்தியாய் ஊளையிட்டுப்—பரிகளைக் கொன்று உதிரம்
சிந்தக்குடலைபுண்டு-சிதைத்துக் காட்டிற்போயின. வந்த



[பரிகள் நரிகளான செய்தியை யறிந்த மன்னவன் தீயெழச் சினந்து]

விருத்தம்.

"மன்னிய வாதவூரன் வஞ்சமனக்கள்வன் மிக்(க) எம்
பொன் எலாம் கவர்ந்து, காட்டில் பொதிந்துவாழ் நரிகள் தம்மைப்
பன்னிறப் பரியாய் விட்டான். பார்த்தீரா? மந்திரிமாரே!
என்ன இப் பாபம் ஐயா! என்செய்வது இவனை?" என்றான்.

[இம்மொழியைக்கேட்ட அமைச்சர் முதலானோர் வாளாயிருப்ப, வழக்கம்போல் வாதவூரர் அவைக்கு வர அரசன் அவரைச் சினந்து]

அரசன் கூறல்; இராகம்-சமாசு-ரூபகதாளம்.

பல்லவி.

தென்னவன் பிரமராயரே
தெரிந்ததும் சேதி-போம்-போம்-போம் போம் (தென்)

அனு பல்லவி.

நன்மை பென்று நேரே—மிக
நல்லவர்போல் நீரே—செய்கிறீரே (தென்)

சரணங்கள்.

(க). பொருளை எல்லாம் கவர்ந்து—நல்ல
புரவி வாங்க நினைந்து—எழுந்து
முரண், வனநரிகள் முற்றும் பரியாக்கி
முன்னம் விட்டே எனை மோசம் செய்த துரோகி (தென்)

வாதவூரர் சொல்லல்

கீர்த்தனம்-இராகம்-இலாவணி-யமுனகலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கோபமாய்ப் பேசவேண்டாம் ஐயா!
கொற்றவா!! மதுரை நகர்க்கதிபதியே!!!

(உ). இவ்விதம் தங்களுக்கு இடர்செய்ய நினைந்திலேன்
எழைமேற் கிருபை வைத்துக்
கொவ்வைக் கனிபோல் விழி சிவக்காமல் என் பிழையைக்
கொள்ளுவீர் மனம் பொறுத்து. (கோப)

திருவிளையாடற் புராணச் செய்யுள்

'பிட்டிடுவேன் உனக்கு, என்றாள், அதற்கு இசைந்து, 'பெரும் பசியால்
சுட்டுட நான் மெலிந்தேன், சுவைப்பிட்டில் உதிர்ந்தனவாம்
இட்டிடுவாய், அதுமுற்றுந் தின்று, நான் இளைப்பாறிக்
கட்டிடுவேன், நின் அடையகரை' என்றான், கரையில்லான்.

[வந்தி இட்ட பிட்டைத்தன் அழுக்குடையின் முன்றானையில் வாங்கி உண்ணும்போது, ஐயன் 'ராயர் பதந்தாம் இருந்த சேகரன்று; தென்னவனுப் உலகாண்ட திருவருளுக்கு இதுதவே யன்றி எம்பெருமானார் இதன் சுவையை உணரவில்லை' என்று கூறி மறுமுறையும் பிட்டைப்பெற்று 'தாயே! நான் தூங்கி உன் வேலையை இனிச் செய்வேன்' என்று மண்ணைக் கரையை யடைந்து, ஆங்கு வேலை பார்க்குங் கூலியாட்களைக் கூப்பிடலானார்.]

கீர்த்தனம்—இராகம்—சுருட்டி—ஆதிதாளம்

வாருங்கடா தம்பிமாரே, இதோ
வண்மையுள்ள பிட்டுக்கொண்டு வந்திருக்கிறேன்-இதைத் (வா)
இதை-வாங்கி வாரிப்போட்டு வெட்டிப்புதைப்பீர்-என் முன் (வா)
இது-வான முதல் போய்விடுக்கும் சீக்கிரமாக-ஓடி (வா)
இந்த-வையகத்தில் கண்டோர்களோ இந்தப் பிட்டைப் போல்-
[சேர வாருங்கடா தம்பிமாரே.

[கூலியாட்களுக்குத் தான் கொண்டு வந்த பிட்டைக் கொடுக்க, அவர்கள் வேலையைவிட்டு, பிட்டைத்தின்று கொண்டு அவரது பெயர், ஊர், பாட்டினுடைமை, ஐயன் கூறுகின்றார்.]

நொண்டிச்சிந்து—இராகம்—பைரவி—ஆதிதாளம்

கேளுங்கடா தம்பிமாரே-வாழ்வு-கெட்டு இந்தக் கூலியாளாய் வந்திருந்தேன்; என்னென்றெடுத்துப் புகல்வோர்-சிறப்பாகவும் இருந்தது வடமேதரம் அதிலே ஒரு; வெள்ளி மலையது உண்டு-பார்க்க-வியப்புறும் அதுதான் நமது வீடு; குபேரனும் சந்திரனும்-என்பனம்-கோனுடன் நடக்கின்ற சிநேகிதராம்; எமக்கே இரண்டு மனைவி-பார்வதி-எந்திழை கங்கை பெண் இவர்கள்; விரும்பிய பிள்ளை மூவர்-கணபதி-வேலவன் வீரபத்திரனும்; இவர்களோடிருந்து கொண்டு—தும்பிக்கை—இடங்கையாய்



நடத்தி எல்லோரும் மதிக்க; வானவர் தானவர் வணங்க-பூமி-மன்னவர்களும் பணிய வசித்திருந்தோம்; ஏகசக்கிராதிபதியாய்-வெகுகாலம்-இடரின்றி சுகமாக வாழாது வாழ்ந்தோம்; பார்வதி மனைவி-நாமும்-பலபல விதமாகக் கடுகடுத்துப்; பேசாதவெல்லாம் பேசினாள்-அதனால்-பிரிந்திட மனம் நொந்துத் துணிவடைந்து; பிள்ளைகள் தனமும் பார்த்தோம்-அதுவும்-பிடிக்கலைத் தனமாகி எல்லாம் ஒன்றானான்; எந்தெந்தக் காரியத்துக்கும்-அவன்-எமக்கு முன்னே போய்வசித்திருக்கான்; வேலவன் சேதிகேட்டு-பெண்ணை-விரும்பித் தொடர்ந்தலைந்தான் அதுவன்றி; தும்பிக்கைக் கவனியாமல்-இந்தக்-கோலாகலம் செய்யலாமென்றேன்; புத்தி நமக்குப் போதித்தான்-என்னுடைய-மகனும்; என்றதற்குக் கோபம் கொண்டு; ஆண்டி வேடத்தைத் தாங்கி-வீட்டைவிட்டு-அகன்றுவிட்டான், வீரபத்திரன் என்போன்; சண்டைக்குப் பயம் கடடுறன்-சொல்வதைச்-சற்றுங் கேட்கமாட்டேன் என்கிறான்; இவைகளினால் வெறுத்து-வீட்டைவிட்டு-ஏகாங்கியாக வந்தோம் பிழைப்பதற்கு; நாம் வந்த சேதியறிந்து-எம மைத்துனர்-நாராயணர் பயில் போய் விழுந்தார்; மாமன் இருவர்களிலே-ஒருவர்-மனம் நொந்து மலையிலே வசித்துவிட்டார்; இன்னொருவர் தன் சிரமை-இழந்து-இறந்துவிட்டார் இந்த வேதனையினால்; அதுவன்றி நாம் சாக-விஷத்தை-அள்ளி உண்டும் சாகவில்லை பிழைத்திருக்கிறோம்; பொல்லாத காலத்தாலே-நம்முடைய-பொருள், பிள்ளை மனைவி யாவும்விட்டும்; பித்துக் கொண்டு ஒருவன் சிரமைக்-கிள்ளிவிட்டோம்-பேருலகில் கண்டவர்கள் போமேனென்று; கல்லாலும் வில்லாலும் அடித்தார்-இன்னொருவர்-காலால் உதைத்தார் அதையும் பொறுத்துக்கொண்டு பித்துக்கொண்டலைந்த பின்-மதுரையில்-பெண்ணொன்றைக் கலியாணம் செய்து கொண்டு; வயிறு வளர்ப்பதற்கு-மன்னவன் வாழும் மதுரையில் வளையல் விற்றோம்; மாணிக்கக் கோர்வை விற்றோம்-தரித்திரம்-மாறவில்லை விறகுக்கட்டும் விற்றோம்; சேவைகள் அவிர்ப்பாகம்-உண்டும்-தீராப்பசியால் சிறுபிள்ளைக் கறியும்; வேடன் கொடுத்த ஊனும்-சாப்பிட்டும்-வெய்யபசி மடங்கவில்லை அதனால்; வந்தியின் பிட்டை அருந்தக்-கூலியாளாய்-வந்தோம் அப்பா வையையிலே மண்ணைச் சுமக்க; மாதவர் சொக்கலிங்கர்-எழிலாய்-இசைந்த நம் மனைவி பேர் மீனாட்சி; என்று நம் வரலாற்றைக்- கூலியாளர்க்-கியம்பி இனிமையுடன் வேலைபார்த்தார்; சங்கர சாம்பசிவா-சிவசிவ-சாம்பசதாசிவ மகாதேவா.

[பின்னர் கூலியாளாம் பரமன் கூலியாட்களுடன் வேலை செய்து வந்தது வியப்புறுமாறு விளங்கிற்று]

**கீர்த்தனம்—இராகம்—சங்கராபரணம்—ஆதிதாளம்.**

**பல்லவி**

வேலைபார்த்து வாரார்—வந்தியின் (வேலை)

**அநுபல்லவி**

சோலைத்தில்லை வெளியில்—காலைத் தூக்கி யாடிய
மாலைப்பிறை முடித்தோர்—மேலைக் கூலியாளாகி (வேலை)

**சரணங்கள்**

(க) வெட்டுவார் கூடையில் மண்ணெடுப்பார் — அதை
வேற்றுப் பங்கினில் கொட்டி விடுப்பார் — கூடைக்
கட்டுகளை அவிழ்த்துத் தொடுப்பார் — வேலைக்
காரார்களுக்குப் பிட்டைக் கொடுப்பார்-இவ்விதம் (வேலை)

(உ) பார்க்க மண்ணை முடிமேல் அமைப்பார் — மிகப்
பாரம் எனக் குறைத்துச் சுமப்பார் — கேட்கத்
தீர்க்கமாய்ப் பாட்டுப் பாடி நகைப்பார் — வேலை
செய்யாமல் விளையாடித் திகைப்பார்-இவ்விதம் (வேலை)

(ங) வந்திமுன் களைப்பாகச் செல்வார் — பிட்டை
வாங்கித் துணியில் வைத்துக் கொள்வார் — அள்ளிச்
சிந்திட வாயிற் கொட்டி மெல்வார் — வேலை
செய்து வந்தோம் என்று சொல்வார்-இவ்விதம் (வேலை)

(ச) தழைத்த மரத்தடி வீற்றிடுவார் — கூடை
தலைக்கு வைத்தே யுறங்கிடுவார் — புனல்
செழித்த உடைப்பில் நீந்திடுவார் — உள்ளே
சென்று மேலே வந்திடுவார்-இவ்விதம் (வேலை)

[வந்தியின் ஆள் வீணே இருப்பதைக் கோல்கைச் சேவகர் தலைவன் கண்டு அவரைப்பற்றித் தம்மருகிலுள்ளாரிடம் உரைக்கலாயினன்]

**இராகம்—கமாசு—உருபகதாளம்**

**பல்லவி**

பாரடா! இங்கு வந்தி ஆள் எனப்
பகர்ந்து வேலை செய்யா திருப்ப தெனப் (பாரடா)



**அநுபல்லவி**

ஆரடா? இவன் அறியோம் நாம் எனவே
அடிக்கவும், கையாற் பிடிக்கவும், மனம்
நடுக்குது, பாபம் கொடுக்குது இதைப் (பாரடா)

**சரணங்கள்**

(க) பித்தனோ? இவன் எந்த ஊரோ,
பெருமையும் இறுமாப்பையும் பார்த்தீரோ,
சித்தனோ? இந்திர சாலங் கற்றவனோ
இந்தவிதமாய் வந்திவேலையை
முந்தக் கெடுக்க வந்தகள்வனோ? (பாரடா)

(உ) செல்வம் நீங்கி மனதுவாடி
சிறுமையால் வேலை—செய்ய வந்தானோ கூடி
மல் திணித் தோள் மன்னவன் மகனோ?
மாரனோ, பாடல் வீரனோ, அதி
சூரனோ, மிகுதீரனோ? இவன் (பாரடா)

(ங) கூறும் தாய் தந்தை யில்லாதவனோ,
கூலிக்காளாகச் செய்தவன் எவனோ,
வேறுவேலைகள் செய்திராதவனோ?
மேதினிபுகழ் போதனி மன்னன்
நீதிசமுகம் ஓதுவோம் இதைப் (பாரடா)

[வந்தி ஆளின் செய்கையைப் பணியாளர் பாண்டியனுக்கு உணர்த்த அவன் அதை அறிய விரும்பி வையை நோக்கி விருதுகள் சூழ எழுந்தனன்]

**பாண்டியன் புறப்பாடு—கலியாணி—திரிபுடைத்தாளம்**

**பல்லவி**

வந்தான் மதுரையாள் சந்திரகுல ராசன் அரிமர்த்தனன்
வையைநதி தன்னில் நேசன்

**அநுபல்லவி**

சுந்தரக்கொடி துலங்க-சூழ்ந்துமுரச முழங்க
சூரரணைபடை-வீரர் நெருங்கிடத்
தீரமுடன் அதி—காரஞ் செலுத்தியே (வந்தான்)

### சரணங்கள்

(க) முத்துக் குடைகளுஞ் சுருட்டி பிடிப்பவரும்-சாமரை வீசி
முன்னே காளாஞ்சி எடுப்பவரும்-நடனப் பெண்கள்
தித்தா வெனப் பாடி யாடவும்
செந்தமிழ்க் கவிவாணர் கூடவும்
திகழ்க் கட்டியங்கள் புகழ்க்கூறிவரச்
சகல விருதுடன் ககனவரசன் போல் (வந்தான்)

(உ) யானை குதிரைகள் ஒட்டகங் கூடத்-தேசத்திலுள்ள
யாவரும் தனைக்கொண்டாட-அமைச்சர் சூழச்
சேனையின் தலைவராகச்
செல்பரி வைகி முன்பாகச்
சிங்காரமதாகத் தங்கமுடி மின்னக்
கங்கை வையைக்கரை அங்கே இறங்கியே (வந்தான்)

(ங) ஒவ்வொரு கரை யடைபட்டிருப்பதையும் கண்ணிலே கண்டு
உயர்ந்த கிரி போலிருப்பதையும்-யோசித்து மன்னன்
செவ்வையாய் மனம் உவந்து
சென்று வந்தி, பங்கில் வந்து
சித்தங் கலங்கியே இத்தனை நாளாக
அத்து மீறி கரை மெத்தடையாதென (வந்தான்)

(ச) ஆ நபங்கிது, அடைக்காதிருப்பானேன்? சேவகனைக்கண்டு
அதட்டினான், இப்படியாவானேன்?-வழங்கும் வந்திப்
பெருடையவள் பங்(கு) இது வெனப்
பேச, அப்படியா என
வீரியமாய்ச்சின மீறி வந்தி ஆளை
'நேரில் அழை' எனக் கூறினிரைவாக (வந்தான்)

[சின மெழ விழிக்கும் மன்னன் முன்னிலையில் ஈசன் ஒரு கொட்டுமண்ணை திருமுடியிற்றூங்கி, பணியாளர் அழைப்பிக்க, வரலானார்]

### கண்ணிகள்

மால், அயன், இந்திராதி தேவர் மதி, ரவி, கின்னரர்களும்
மாமுனி, தபோதனர்கள் மன்னு மூவுலகரும்
வேதமோதுவோரும், நான்கு வேதசாத்திரங்களும்
மேவும் ஐம்புலன், கரணம் மிக்க தத்துவங்களும்



காரணப்பரம்பொருள், இக் காசினியோர் காணவே
கரை அடைக்க, வந்தி அன்பிற் கட்டுண்(டு) எல்லோர் தோண
சிறுமை கூலியாளதாகிச் சேவகன் கைச்சிக்கியே [வே
சேர்ந்து மன்னன் சமுகம் வந்தார் சிற்சுகத்தில் சொக்கியே

[கூலியாளாம் ஐயனைத் தென்னவன் நோக்கி "வந்தியின் ஆள் நீ தானோ? என் இக்கரையை அடைக்கவில்லை?" எனப் பல கேட்டும், அடியார்க் கெளியன் வாய் பேசாது இருத்தலைக் கண்டு, சினந்து பாண்டியன் என்செய்தானெனில்]

### திருவிளையாடற் புராணச் செய்யுள்

கண்டனன் கனன்று, வேந்தன் கையிற் பொற்பிரம்பு வாங்கி
அண்டமும் அளவிலாத உயிர்களும் ஆகமாகக்
கொண்டவன் முதுகில் வீசிப்புடைத்தனன். கூடையோடும்
மண்தனை உடைப்பிற் கொட்டி மறைந்தனன், நிறைந்த சோதி.

[இறைவனது முதுகிற் பட்ட பிரம்படி]

### திருவாதவூரர் புராணச் செய்யுள்

தார் மேல் நின்றிலங்கு புயவழுதிமேலும், தன்மனை மங்கையர் மேலும், அமைச்சர் மேலும்; யார் மேலுஞ் சென்று, பெருஞ் சேனை மேலும், அயன்மேலும், மால்மேலும், அறிவோர்மேலும்; தேர்மேல் வெம்பகல் மேலும், மதியின் மேலும், சிறந்துள இந்திரன் மேலும், தேவர்மேலும்; பார்மேலும், கடல்மேலும், மரங்கள் மேலும்பட்டது, அரன் மெய்யில் அடிபட்ட போது.

[மன்னன் பிரம்படியுண்ட மாதேவன், ஒரு கூடைமண்ணை உடைப்பிற் கொட்டி மறைய உடைப்பு அடைபட்டு கரைவளம் பெற்றது. இவற்றைக் கண்ணுற்ற சேவகர்கள் இறைவனென உணர்ந்து, விரைந்து வந்தியினிருக்கையை அணுக, அவள், போன கூலியாள் யாது செயதானோ என அஞ்சி இறைவனைத் தொழ,]

### திருவிளையாடற் புராணச்செய்யுட்கள்

1. கண்ணுதல் கந்தி கணத்தவர், விசும்பில், கதிர்விடு திப்பிய விமானம் மண்ணிடை இழிச்சி, 'அன்னை! வா' என்று வல்லை வைத்து அமரர் பண்ணிறைகீத ஓதையும், வேதப்பனுவலும், துந்துபிஜத்தும் [பூமழையும் விண்ணிடை மிமிரச் சிவனருளடைத்தோர் மேவிய சிவபுரத்துய்த்தார்
2. மன்றுடையான், ஓர் கூடை மண்கொட்டி மறைந்ததும் அடைகரை நீண்ட; குன்றென உயர்ந்த தன்மையும், தம்மேற் கோலடி பட்டதும் நோக்கி; என்றன் மேல் பட்டது, என்றன் மேல் பட்டது, இதுவென அது வென அமைச்சர்; தின்றவர் உணர்ந்தும் நிகழ்ச்சியும் பிறர்பால் நிகழ்ச்சியும் நோக்கி அங்கிருபன்.

['இறைவனே கூலியாளாயினன்' என்பதையுணர்ந்தவளவில் அரிமர்த்தனன் அஞ்சி, நெஞ்சம் பதைக்க, உடல் நடுங்கி மயிர்க்குச் செறியத் தொழுதனன்]

இராகம்—கமாசு—உருபகதாளம்.

(௧) அறியாமல் ஈசனை-அடித்தேன் மகேசனை
(௨) மதிகேடன் ஆனேன்-மாபாவி யானேன் (அறி)
(௩) இட்ட தெய்வம் ஈதென்றே-எண்ணாமலே நின்றே (அறி)
(௪) தேகம் பொறுத்ததோ-திருவுளம் நைந்ததோ (அறி)
(௫) ஆளாய் வந்தும் வீணே-யாரோவென்றிருந்தேனே (அறி)
(௬) கிடைத்ததை விட்டேனே-கீர்த்தியும் கெட்டேனே (அறி)

[திருவுருக் கரந்த எம் அண்ணல், தென்னவன் துயரம் போக்க அசரீரியாகநின்று, "தென்னவ! அறநெறியால் வந்த நின்செல்வம், வாதவூரனால் அறநெறிவாய்ப்பட்டதை உணராது துன்புறுத்தினாய். யான் ஆற்றாது, நரிகளைப் பரிகளாகவும் பின்னர் நரிகளாகவும் செய்தும், வையையைப் பெருகிடச் செய்தும் துணைபுரிந்தேம். இன்று வந்திக்கு ஆளாகி நின் கைப்பிரம்படி யுண்டதும் அவன் பொருட்டே. இனி நீ அவன் விருப்பிற்கியைய நடப்பாய்" என அருளினார். இதைக் கேட்டவுடன் பாண்டியன் இறும்பூதுஎய்தி, வாதவூரரைத்தேடி அணுகி, அவரைவணங்கித் தொழுதான்]

இராகம்—செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி

வாதவூரரே! உமது-மகிமை அறியாமற் போனேன் (வாத

அநுபல்லவி

பாதகன்நான் அடியார்எனப்-பாராமலே தீதுசெய்தேனே (வாத)
சிவனடியார் தமைவேலைக்குச்-சேர்த்துக் கொண்ட தீங்கினேன் ஐயா ,,
புத்தியிலாது இழைத்த தீங்கைப்-பொறுத்தாள வேண்டும் ஐயனே ,,
இவ்வுலகை அரசுபுரிந்து-இன்பமாக ஆண்டுவாரும். ,,
பொருளிச்சையால் போதம் நீங்கிப்-போற்றிடாப் புலையன் ஆகினேன் ,,
சிவனடியார்இகழ்ந்தசெல்வச்-செருக்கால்உமைமறந்தேனே ,,
முன்கோபக்காரன் எனை-முனியாமல் ஆதரித்தாளும் ,,
சுந்தராதி பணிந்திறைஞ்சும்-கங்காதரன் அருள்பெற்ற (வாத)

[தன் பிழையைப் பொறுத்தருளுமாறுவேண்டிய பாண்டியனை, அடிகள் நோக்கித் தான் அவ்வாறு புகழுதற் குரியவனன்று என, பாண்டியன் 'பெரியார் தந்நிலையினை யுணரா



ராதலின் அது பொருந்தும் எனக்கூறி, அடிகளுடன் சுந்தரனைத் தொழுது, அரண்மனைபுக்கு, சிலநாள்வதிய, ஒருநாள் வாதவூரடிகள் தான் திருப்பெருந்துறை செல்ல அவாவுற்றிருப்பதாகக் கூறினார். அதைக் கேட்டதும் மன்னன் வருந்தினான்.]

இருவருக்கும் நிகழ்ந்த சொல்லாடல்—(காப்பி-ஆதிதாளம்)

பல்லவி

[மன்னன்] வாதவூரரே பிரிந்து-வாழமனம் வல்லையே. (வாத)

அநுபல்லவி

ஏதுசெய்குவேனான்உமக்-கென்மேற்கிருபை யில்லையே.

வாதவூரர்] தாலமீதில் மனம் வருந்தித்-தளருவதேன் ராசனே!
கோலப்பெருந்துறை போகக்-கொடுப்பீர் விடை நேசனே:—

மன்.] உற்ற அனேகர் இருந்த என்?-உம்மைப்போற் கிடைக்குமோ?
இற்றை வரை உம்மால் ஆண்டேன்-இனி எவ்விதம் நடக்குமோ?

வாத.] என்னால் ஒன்றும் ஆகவில்லை-ஈசன் செயல் போல் முடியுமே
தென்னவா உண்மை தெரிந்தால்-தீப் பவம் மடியுமே. (தால)

மன்] நீள்நிலத்தை நீரேயாளும்-நீதியுள்ள தந்திரி!
நானுமக்கு அடிமை செய்ய-ஞாயமுண்டுமெந்திரி! (வாத)

வாத] வானுலகு பூவுலகு-வாழ்வும் புகழ் வேண்டிடேன்.
ஆனேறூரும் ஈசன்கழல்-அன்றி ஒன்றும் தீண்டிடேன். (தால)

மன்] பாசம் அறப்பத்திவழி-பற்றச் செய்த மெய்யனே!
பூசுரர் வாழ் பெருந்துறை-போய்வாரும் என்ஐயனே! (வாத)

வாத] பூவுலகை ஆண்டு வரும்-புயபல கெம்பீரனே!
காவலனே! போய்வாரேன் நான்-கயற் கொடி சிங்காரனே!

[மன்னனிடம் விடைபெற்றதும் அடிகள் சுந்தரன் கோயில் வந்து தொழுதார்.]

திருவாசகம்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன், பெம்மான், பெருந்துறையான்,
விண் சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்,
கண் சுமந்த நெற்றிக் கடவுள், கலி மதுரை
மண் சுமந்து, கூலி கொண்டு, அக்கோவால்மொத்துண்டு,
புண் சுமந்த பொன் மேனி பாடுதும்காண், அம்மானாய்!

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே!
சட்டநேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே! சிவலோகனே! சிறு நாயினும் கடையாய வெம்
கட்டனேனையும் ஆட் கொள்வான் வந்துகாட்டினாய்க் கழுக்குன்றிலே.

[பின்னர் பெருந்துறைக்குச் செல்ல, அடிகள் கோயிலினின்றும் புறப்பட்டார்.]

விருத்தம்

கட்டுறக் கலன்கள் ஆடை காவலனிடத்(து) அமைச்சும்
விட்டணைந்து ஈசன்பாலில் விடைபெற்று மதுரை நீங்கிச்
சுட்டவெண்பொடி, ருத்திராக்கம், சுத்தகோலமும் பூண்டு
சிட்டர் வாழ் பெருந்துறைக்குச் செல்கின்றார் வாதவூரர்.

திருவாதவூரர் புராணச் செய்யுட்கள்.

(க) கண்ணுழையாத கானும், பதிகளும் கடிது நீங்கி
எண்ணரும் முனிவர்மேவும் எழில்பெருந்துறையில் எய்திப்
புண்ணிய இனத்தார் சூழ, முன்பு போல் இருந்த போதில்
விண்ணவர் அதிபன் பொற்றாள் வீழ்ந்து இது தாழ்ந்து சொல்வார்.

(உ) தீண்டுதற்கு அரிய மார்பில், சேயிழை தனத்தினாலும்
ஈண்டு ஒரு மாறனாலும் எய்திய தழும்பு போற்றி!
வேண்டிய வடிவமாகி வெம்பரிமேற் கொண்டு எம்மை
ஆண்டருள் செய்யவந்த அண்ணலே! போற்றி, போற்றி!!

[வாதவூரர் பெருந்துறை போந்து, குருந்த நீழலிருந்த அண்ணலின் அடிகளைத் தொழுது போற்ற, அண்ணல் அடிகட்கு ஆசிகூறி, தன் திருக்கரத்தை அவர்முடிமேற் சூட்டி, நுதலில் நீறுபூசி, அருள்நோக்கு அளித்து, அடிகளை ஒரு புடை இருத்தி, தம்முடன் இருக்கும் மாணவர்களை நோக்கிச் சில புகலலுற்றார்]

இறைவன் கூறல் [இராகம்—சங்கராபரணம்—ரூபக தாளம்].

அன்பரே! நம் உருத்தோண—அரும் கைலையோர்கள் மாண
இன்பமாய் எண்ணினர் பேண—ஏக வேணும் காண.

அன்பர்கள் சொல்லல்

ஏகலாகுமோ பிரிந்து—என் செய்குவோம் இங்கிருந்து
போக ஞாயமோ தெரிந்து—புலம்புவதும் அறிந்து

இறை] புலம்பாதீர் நம்பாதம் போலே—பொருந்த தெய்வப் பீடத்திலே
நலமாய் வைத்துப் பணியும் மேலே—நாம் வருவோம் அதிலே



அன்] நாமம் இல்லா நற்சங்கரா—நாங்கள் உமதிடம் எவ்வாறு
சேமமுடன் வருவோம் பரா—செப்புங் கங்காதரா.

இறை] செப்பிடு மித்தல வாவியில்—செழும் அக்கினி தோன்றும் அதில்
ஒப்பி மூழ்கி நம்பதியில்—உறுவீர் என்றார் அதனில்

அன்] உறுதியுடன் வணங்கி நின்று—உயர்சிவனார் விடை பெற்றன்று
பெருந்துறை வந்தார்கள் சென்று—பிரயலியமாய் நின்று

[இறைவனை வழியனுப்பி அடியார்கள் திருப்பெருந்துறைக்குச் செல்ல, நம்அடிகள் மட்டும் இறைவனைத் தொடராவுற்றார்]

விருத்தம்

வாதவூரடிகள் தானும் வழியினில் தனியே ஏக
மாதொருபாகன் கண்டு மலர்க்கொன்றை மாத்திருக்கப்
பாதமே வணங்க அன்பர், பரமன் 'உமக்கு இனிவீழாமல்
வாதவூரடிகளே! நீர் வருகுவீர், தில்லை' என்றார்

[பின்னர் மணிவாசகர், திருப்பெருந்துறைக்கு வந்து நமச்சிவாய வாழ்க எனும் அகவல் முதல் பல அருள் ததும்பும் தேனினுமினிய பாக்கள் பாடி சிலநாளிருந்து, பின்னர், உத்தரகோச மங்கை, ஆரூர், அண்ணாமலை, கழுக்குன்றம் முதலிய திருப்பதிகட்குச் சென்று, முறையே 'கடையவனேனை,' 'பூங்கமலத்தயன்,' 'ஆதியும் அந்தமும் இல்லா' (திருவெம்பாவை), 'செங்கண் நெடுமால்' (அம்மானை), 'பிணக்கிலாத' எனும் தொடக்கமுடைய பாக்களை உள்ள நெக்குருகப்பாடிப் பின்னர் திருத்தில்லை எய்தி உளம் களித்தார்.]

கீர்த்தனம்—இராகம்—இக்கிலீச கோட்—ஏக தாளம்

(க) வாதவூரர் தில்லைநகர்-வந்தார் அம்பல வாணர்பதம்
வைத்தமனப்-பத்தியுடன்-எத்திசை-நத்திடும்-உத்தமாகிய. (வாத)

(உ) அங்கம் பரவசமாகி-எங்கும் பொங்கச் சிவமாகி
அந்தரங்க-சிந்தைமிக-நைந்து ஆ-னந்தநீர்-சிந்திட விழிகளில் (வாத)

[மணிவாசர் தில்லையைப் புகழ்தல்] இராகம் பியாகு ஆதிதாளம்

பல்லவி

தில்லை என்பது இதுதானோ-தெரியேன் இதுவரைக்கும் (தில்லை)

அநுபல்லவி

தொல்லைப்பிறவியில் ஆழ்ந்தித் துயர்வுறுவோர்க்கு முத்தி
எல்லையைத்தருவோம் வாரும்—என்றுழைக்கு தெல்லோரையும்
பூலோக கைலாச மென்று புகலக்கேட்டதே அன்றி
மேலோகதலம் என்றிதை மேவிப்பார்த்தறிந்திலேனே. (தில்லை)

கீர்த்தனம் இராகம்—பிலகரி ரூபகதாளம்

பல்லவி

தில்லைத்தலம் போலழகை எந்தத்
தேசத்துங் காண்கிலேன். (தில்லை)

அநுபல்லவி

எல்லையில் நடம் இன்பமாய்க் கண்டோருக்(கு)
இல்லைப்பிறவி என்றே மறை ஏத்திடும். (தில்லை)

சரணங்கள்

(க) பதஞ்சலி வியாக்ரமபாதரும் பங்கயன்மால்வியாதரும்
இதம்சலியாத் தும்புரு நாரதரும் இமையோர் கணநாதரும்
நிதம் சலியாது திக்கும் ரவி மதி நிறைவசுக்களும் குபேரனும் விதி
விதம் சலியாக் கின்னரருமே துதி வேதமாமுனி மற்றுயாவர்
[தொழும்பதி (தில்லை)

(உ) கொக்குப் புறாப் பசுங்கிளி கோகிலம் அன்னம் அளி
மிக்க இசை பாடும் வெளி மேவும் மென் பொழிலும் ஒளி
தக்க தென்னை கமுகு கதலிமா தண்பலா விருட்சங்கள் அநேகமாய்
எக்குவலயமும் தொழத்திரமாய் இருக்கும் நீட்சதாள் வீடும் விநோதமா.

(ங) வேதங்கூறும் நியமும்விரி வேள்வி செய்துமமும்
நீதிபெரியோர் வாசமும் நிறைந்த மடாலயமும்
வீதிகளும் அலங்கிர்தமாகவே விளங்குது கடைகள் பலவாகவே
ஓதும் பாடசாலை ஒழுங்காகவே உற்றிலங்கும் சத்திரமுயர்வாகவே.

(ச) சுவர்ணக் கலசம் இலங்க சூழ்ந்து மதில்கள் துலங்க
வர்ணத்துவசம் விளங்க வாவிகூபங்கள் இலங்க [மேய்க்குது.]
இருவிசும்பை நாற்கோபுரம் நோக்குது எய்தினால் சபையில் மனம்
கருவம்மமதை யாவையும்தீய்க்குது கண்டாமணி ஒலிகாதினிற்கேட்குது

[மாணிக்கவாசகர் தில்லையின் அழகை வியந்து, தன் நாட்கடன்களை முடித்துக்கொண்டு திருக்கோயிலுட்புகுந்து, கற்பகப் பிள்ளையாரை வணங்கி, ஆடவல்லானின் அணி பெறும் மன்றம் எய்தி உள்ள மகிழ்வு பொங்கத் துதித்து வணங்கலுற்றார்.]

கீர்த்தனம் இராகம்—கலியாணி ஆதிதாளம்.

பல்லவி

இருகரம் சிரம் குவித்து-நடேசரை ஏத்தித் துதித்தார் நினைந்து.



அநுபல்லவி

(க) உருகி மனது,கண்ணில்-ஓட இன்பநீர்,
உரோமமும் சிலிர்த்துத்தன்-உடலமும் கம்பித்து நின்று
ஓய்வாகி-ஞான ஒளியேகி
உரையின்றி உய்வணம்-உறுதியால் இவ்வணம் (இரு)

(உ) பஞ்சகிருத்தியம் செயும்-பரமனார் தாண்டவத்தைப்
பார்த்தால் பிறவி போகும்-பரமுத்தியுண்டாகும்
பகை யின்று-போகப் பணிவேன் என்று
பத்தியுடன் தொழுது-பதை பதைக்கவே அழுது (இரு)

(ங) தில்லைமா நகரினில்-தேவனைக் கண்டேன் எனத்
திகழ் கண்டப் பத்தும் ஏத்தத்-திறன்மிகுகோயில் மூத்தத்
திருப்பதிகம்-பாடித்தெளிவதிகம்
திகைப்பினில் எய்தார்-தேரிசனம் செய்தார். (இரு)

திருவாசகம் கண்டபத்து

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போயரு நரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்த மணிகொள் தில்லை கண்டேனே.

கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாளுன் றனடுவிருக்கும்உடையாளடுவுள் நீயிருத்தி
யடியேனடுவுளிருவிரும்இருப்பதானாலடியே னுன்
அடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே.

[என ஆடவல்லானையும் சிவகாம வல்லியையும் தொழுது திருப்புலீச்சுரம், திருநாகேசுரம் இவற்றைக் கண்டு வணங்கித் தில்லை மூவாயிரவர் வாழும் வீதியில் வரும்போது 'ஆடும் குலாத் தில்லை' எனும் பதிகத்தை அருளினார்.]

திருவாசகம் குலாப் பத்து

ஓடுங்கவர்தியுமேயுறவென்றிட்டுஉள்கசிந்து
தேடும்பொருளுஞ்சிவன்கழலேயெனத்தெளிந்து
கூடுமுயிருங்குமண்டையிடக்குனித்தடியேன்
ஆடுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

[பின்னர் அடிகளார் 'அச்சப்பத்து' பாடியருளினர்.]

அச்சப்பத்து

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதம் நண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டென நினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே

தேனொழுகும் வாசகமொழியருளி, தில்லையில் அடிகள் எழுந்தருளியிருந்தபோது, அம்பலவாணன், புத்தசமயத்தின் இழிவையும் சைவசமயத்தின் சிறப்பையும் உலகோர்க்கு அறிவுறுத்தத் திருவுளங்கொண்டு.]

கீர்த்தனம்—இராகம்—கமாசு—ரூபக தாளம்,

பல்லவி,

தில்லைநடராசர்தவ வடிவாகித் — தில்லை

அனுபல்லவி.

தவவடிவாகித் தலமெங்குமேகித் — தில்லை

சிதம்பரம்வந்தார் தெரிசித்துக்கொண்டார்
இதமுறநின்றார் ஈழதேசஞ்சென்றார் — தில்லை

பொன்னம்பலம்வாழ்க புத்தரிடமாக
இன்னுமநேகமாக இயம்பினான்பாதந் — தில்லை

இருக்குமிடமெங்கும் இதுபோலஅக்கங்கும்
தருக்கமிட்டேதங்கும் தரும்புத்தர்மனமங்கும் — தில்லை

தவசிபோல்வந்த தற்பரன்சொந்த
அவசியமிந்த வணமருளமுந்த — தில்லை

[தவவடிவு தாங்கிய ஈசனின் உரையை, தன் குடிகள் வழியறிந்த புத்த மன்னன் ஈசனை அழைத்து உசாவியகாலை 'பொன்னம்பலம் வாழ்க' எனும் இறைவனது மொழி அவைக்களத்திருந்த புத்தாசிரியனுக்குச் சினத்தை எழுப்பியது.]

விருத்தம்.

புத்ததெய்வமன்றியிந்தப்பூமிதன்னிற்புகலுதற்குவேறுமொரு
தெய்வமுண்டோ, இத்தனைகெம்பீரமுடனெங்கள்மன்னனிட
முரைத்ததாரையா?; இதைவிட்டேகுஞ் சத்தமுறவுங்கள்தெய்வ
நடஞ்செய்காலில்தரிவீரக்கழல்கொடியும்அறத்தெரிந்தே, அத்
தலத்திலெங்கள்தெய்வமதைத்தாபிப்போமறிவீரோ என்றவரை
அதட்டினனே.



[பின்னர் புத்தகுரு, மன்னனைத் தில்லைக்கு எழுந்தருள வேண்டினன். மன்னனும் இசைந்து ஆடவல்லானின் அருள் திறத்தை அறியவேண்டி, பௌத்தமுறைகளாற் பெரிதும் முயன்றும் நீக்க இயலாத்தன் ஊமைப்பெண்ணையும் உடன் கொண்டு படைகள் புடைசூழ ஈழநாடு நீங்கித்தில்லையைநோக்கி வரும்போது இறைவன் மறைந்தருளினர்.]

ஈழநாட்டரசன் சிதம்பரம் வருகிறவிதம்
கீர்த்தனம்-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி

ஈழநாட்டரசன்-வாழும்புத்தகுருடனே-மிக
எழிலார்தில்லைநகரிற்-பழுதடையவேவந்தான் — ஈழ

அநு பல்லவி.

சூழும்புத்தகுருக்களுஞ் சொல்லிலாவூமையதாகு
மாழைமேனிப்புத்திரியை மகிழ்வாயழைத்துக்கொண்டு — ஈழ

சரணங்கள்,

தாழும்பலபேர்களுடன் வீழும்பனிநீர்தெளிக்கச்
சூழுமயிற்பீலி, கையிற் கோழைமனத்தோர்பிடிக்க
வாழும்ருத்திராக்கமணி சூழ்ந்திருநீறணியாப்
பாழானமுகத்தைக்காட்டி ஏழனஞ்செய்யயாவரும் — ஈழ

அற்புத்திகுருவார்த்தையின் சொற்படிநடந்துவரும்
பொற்பிலாப்புத்தராசனுங் கற்பினையுடன்
விற்பனர்படைகள்சூழ நற்பெருஞ்சிவிகையேறி
அற்புதமுரசமார்ப்பச் சிற்பரன்தில்லையைநோக்கி — ஈழ

அந்தமில்சிவாகமமும் வெந்தவெண்ணீறுமணியுஞ்
சிந்திசிவசமயமும் இந்துபுனையீசனையும்
நிந்தனைசெய்பாவிமார்கள் பந்திகபடுள்ளவர்கள்
சொந்தமாம்புத்தகுருவைப் பந்தியாயழைத்துக்கொண்டு — ஈழ

வாத்தியமொலித்திடவும் நேர்த்தியாய்யானைகுதிரை
தாழ்த்திடாமல்வேகமாக ஆர்த்துவரவுங்
கீர்த்திசிவசமயத்தைச் சாத்திரத்தால்வென்றெல்லோரும் [ஈழ
பார்த்திடப்புத்ததெய்வத்தைச் சேர்த்திடுவோமம்பலத்தென்

[தற்பெருமையுடன் புத்தர்கள் தில்லையை படைந்து, சிற்றம்பலம் அணுகி, ஆர்ப்ப, கோயிற் பணியாளர் அதைத் தில்லை மூவாயிரவரிடம் தெரிவித்தனர். பிறசமயிகளின் துடுக்கை

யறிந்து மூவாயிரவரும் ஒன்று கூடி கோயிலினின்று அவர்களை அப்புறம்படுத்த முயன்றபோது, 'ஈழநாட்டில் தவசி ஒருவன் பொன்னம்பலம் வாழ்க வென்று கூவினன்' ஆகையால் யாங்கள் இங்கு வந்து உங்களுடன் சமயவாதம் புரிந்து எங்கள் கடவுளை இக் கோயிலினுள் நாட்ட வந்தோம் என்று கூறி வாதுக்கழைக்க வாதில் மூவாயிரவரும் பின்னடைந்து, செய்தியைச் சோழ மன்னனுக்கு விரைவில் அனுப்பினர். அன்றிரவில் இறைவன் மூவாயிரவரின் கனவிற்றோன்றி, 'பேரன்பு மிக்க மணிவாசகரை யணுகின் வெற்றியுறலாம்' என உரைத்து, மணிவாசகரிடத்தும் மூவாயிரவருக்குத் துணைபுரிய ஆணையிட்டு மறைந்தார். இறைவனின் ஆணையை முடிமீதுகொண்டு அடிகளும் மூவாயிரவரும், புத்தர்களுடன் சொற்போர் புரியக் கூடியபோது சோழமன்னன் படைகள் சூழ எழுந்தருளினன்.]

### சோழராசன் தில்லைக்கு வருகிறவிதம்.

**கீர்த்தனம்-இராகம்-மூளரி-திரிபுடை-தாளம்.**

**பல்லவி.**

வந்தாரே சோழராசன் தில்லைநகரில்
வந்தாரே சோழராசன்

**அனுபல்லவி.**

தந்தப் பல்லக்கிலேறித் தானைசூழ்ந்து வரவுந்
தானுவே-தானுவே-தானுவென்றே துதித்து வந்தாரே

**சரணங்கள்.**

நெற்றியில் நீறணிந்து ருத்ராக்கமாலை
நிறைய மேனியிற்புனைந்து
பெற்றம்மூருஞ் சிவனார் பெருமைதனை யெடுத்துப்
பேசிப்-பேசிப்-பேசிப்-புகழ்ந்துவாழ்த்தி- வந்தாரே

முத்துக் குடைகள்பிடிக்க சாமரைகொடி
முன்னேவருவோ ரெடுக்க
எத்திசையும் பரவ எல்லோர்களுடன் சேர்ந்து
ஈசா-யீசா-யீசா-வென அன்புடன் வந்தாரே

சில்லரி பேரிகையு மநேக வாத்யஞ்
சிறப்பாய் முழங்கிடவுந்
தில்லைநகரைக் கண்டு தெரிசித்துக் கீழிறங்கித்
தேவா-தேவா-தேவா வெனக் கைகூப்பி வந்தாரே



ஆலயத்துக்குட்புகுந்து சிற்சபேசரை
அன்பாய்வணங்கியெழுந்து
பாலபுத்தர்களுடன் வாழும்வாதவூரரை
வணங்கி-வணங்கி-வணங்கி மண்டபந்தனில் வந்தாரே

[சோழமன்னனுக்கு ஈழநாட்டரசன் வணக்கம் செலுத்திய தும் மூவாயிரவரும் வாழ்த்துக் கூறினர். பின்னர் மணிவாசகர் புத்தாசிரியனை நோக்கி 'நீங்கள் இவண் வருதற்குரிய காரணம் யாது?' என வினவ, அதற்கு மற்றவர் கூறுகின்றார்.]

### திருவாதவூரர் புராணச்செய்யுள்.

மன்னுமெங் கடவுளல்லால் மற்றிலை கடவுளென்றே
இந்நெடும் பதியிலெய்தி யியம்பியிங் கெவருங்காணப்
பொன்னினம் பலத்தேயெங்கள் புத்தரை வைத்தல்வேண்டி
நென்னல்வந் திருந்தே னிங்குவேறிலை நினைத்ததென்றான்

### இதுவுமது

என்றலும் வாதவூரெம் மிறைவர்புன் முறுவலெய்தி
முன்தவ மொன்றுமில்லாய் முயல்இபமாவ துண்டோ
நன்றதுநிற்க உன்றன்நற் பெருங்கட வுள்தானுஞ்
சென்றவ னடியிற்சேருஞ் செய்தியுங் கூறுகென்றார்

[மணிவாசக அடிகட்கு புத்தகுரு மறுமொழி கூறல்.]

**கீர்த்தனம்-இராகம்-பியாகு-ஆதிதாளம்.**

**பல்லவி.**

ஞாயஞ்சொல்லி யெனைவெல்லும் இங்கு
நவிலும்பொருளுக்கு நன்றாய்விடைகொடுத்து ஞாயம்

**சரணங்கள்.**

கண்ணி
ஆயும் பெரியவரே வாருங் அருள்
லார்க்குரவி, தோணாது ஒரும் சொல்லப்
பாயும்புத் தன்புகழைத் தேருஞ் ஞாயம்
பல்லாயிர நாவேனும் பாரும்

பிடகநூற் சொல்லிய பெருமை தேவன்
பிறந்தநேக யோனியி லுரிமை பொல்லா
அடல்கொலை யாதியில்லாத் திறமை போற்ற
அரசினீழ லிருப்பா ரருமை ஞாயம்

கருவிற் சேருருவும் வேதனையும் பஞ்ச
கந்தம் விஞ்ஞானம் பாவனையும் மிக
வருமுணர்வு கெட்டவைத் தினையுங் கேடாய்
வயமா யழிதல் முத்திநிலையும் ஞாயம்

எங்கள் புத்ததெய்வத்தைத்தெரிவார் தமக்
கிடரொழித்தேயருள் புரிவார் கருத்
தங்கிப்பிறக்கும்போதுவிரிவார் வெளி
தாய்வயிற்றைப்பிறிவருவார் ஞாயம்

[புத்தகுருவின் பொருள் அற்ற மதியிலாமொழியை சோழ மன்னனிடம் அடிகள் அறிவுறுத்திப் புத்தாசிரியனிடம் அடிகள் கூறுகின்றார்.]

கீர்த்தனம்-இராகம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

எதுக்கித்தனை நீதியில்லாம லியம்புறீர் வார்த்தை ஏது

அநுபல்லவி.

வாதுக்கென்னிடம் வந்த புத்தரே
வாயாடாமற் சொல்வதைக் கேளும் ஏது

சரணங்கள்.

(க) அறமுண்டென் றுவன்புத்தன்பிடகநூலை றந்தாரென் றீரே யின்னும்; அறிவுதோன்றியுடனழியுமென வதுவுஞ்சொன் னீரே-சொல்லும்; பொருளுக்கேடுநீர்சொல்லுமுன் னுணர் வுபொன் றுமாகிற்பாரே-மாயு; மிருளஞ்ஞானம்தருமுன் னூ ல்சொல்லுவ தெப்படியாமதை யெப்பிடச்சொல்லீரே.

(உ) வல்லமையாகவநேகயோனியிலும் வந்துபிறந்தாரென்றாய்-ஒன் றுங்; கொல்லவினையாரெங்கள் கடவுளெனக் கூசா துரைத்து நின்றாய்-கொடும்; வெல்லும் புலி நரியாகிப் பிறப்பாரேல் வெம்பசிக்கிரைகன்றாய்-தழை ; புல்லுந்தின் பாரோ நின்போதி நாதன்சொல்லும் புத்தரே யாரிட மெத்திடலாமென்றாய் ஏது

(ங) வயிற்றைப்பிறியுங்கள் கடவுள்வெளி வருவாரென்றேபேசிச்-சொன்னீர்; பயித்தியங்கொண்டேதாயிறந்தாலது பாவமாச் சேயோசி - அவர்; மயக்கிலாழ்ந்தாளின்னொருவர் மயலே மாற்றுவாரா வீசி-மிகத்; தியக்கங்கொண்டேபுத்திதெளிவில் லாமற் றிடமாயிருந்திங் கடமாய்ப்பேசி ஏது



(ச) காரணவான்மாவைவிட்டுப்பிரியாத காரியரூபமில்லை-யென் றும்; சேணிபோதிநீழல்வாழ்புத்தனுக்குத் தேகமுநாம மில்லை-நன்றாய்ப்; பூரணஞானம்பொன்றுதல்முத்தியென் ற பொய்யரேயென்ன தொல்லை-மிக்கப்; பேருணர்வில்லாப் பிடகநூற்சொன்னதார் பெருமைதங்கிய வரும்பொரு ளில்லை ஏது

புத்தகுருவுக்கும் மாணிக்கவாசகருக்கும் நடக்கும் சொற்போர்.

திருவாதவூரர் புராணச்செய்யுள்,

மாணிக்கவாசகர் சொல்லல்.

அழிந்திடில்லைக் குகந்தமுத்தியென் றுரைத்தாய்ஐந்தும்
அழிந்திடின்முத்திபெற்றார் ஆரெனவினவும்போதில்
அழிந்திடும்ஐந் திரண்டாமுணர்வெனவுரைக்கில்ஐந்தும்
அழிந்தனஇலையால்முத்தியாவதுமில்லையென்றார்.

[இம்மொழியால் புத்தகுருவினைக்கொண்டு, அடிகளிடம் கூறுகின்றான்.]

இதுமுதல் வேறு.

'பொங்குபுகழ்மங்கியபுத்தனும்வெகுண்டே
எங்கடவுளேது? பெறுமுத்தியிலையென்றீர்
உங்கடவுள்யாது மதுமுத்தியெது?' வென்னத்
தங்குசிவஞானமுணர்சைவரிதுசொல்வார்.

மாணிக்கவாசகர் சொல்லல்.

கீர்த்தனம்-இராகம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி.

புத்தகுருவே சொல்வேன் கேளிதனை—யெங்கள்
பூதநாதன்சீரும் வேதமுங்கீர்த்தியும் புத்த

அநுபல்லவி.

எத்திசையும்புகழ் கல்லாலடிநிழலில்
இருந்தறஞ்சொன்னார் நால்வருக்காகப் புத்த

சரணங்கள்.

சிலமயாவரும் கண்டுவணங்கிடச்
சிற்சபையில்நடிப்பார் மேனி
மேவில்நீறணிந்தோர் மாதோர்கூறுடையோர்
மிக்கவருள்கொடுப்பார் அக்கு
மாலிகைதரித்தோர் மாலையில்வீழ்வோரை
மானாமலேதடுத் தாளும்பரசிவம்
கோலமுங்குணமும் பல்கோடிநாவதைக்
கொண்டுரைத்தாலும் கொள்ளாதவர்பெருமை புத்த

புத்தகுரு சொல்லல்.

கீர்த்தனம்-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

காரணஞ்சொல்லும் கல்லாலின் முற்கேள்-உங்கள்
கடவுளைத்தெய்வத்தைக் கருதித்தவம்புரிந்தார் காரண

அநுபல்லவி.

தாரணியிலுள்ளவர்கள் தன்னடிவணங்குதற்கு
நீரணிசடைக்கடவுள் இருந்தருஞ்செய்தாரென்றீரே காரண

சரணங்கள்.

தன்னிச்சனகாதிருவோ மன்னுமுலகோர்க்காகவோ
பின்னவிதமென்றுரையுஞ் சொன்னயமுடன்
மின்னிகர்திருமேனியில் தன்னைநீ முகத்தமென
உன்னதமவனிர்தாரோ வென்னவார்த்தைசொன்னீர் தன்கா

மன்னைபாதிதேகமாகத் தன்குமாரருவந்தன்னை
பெய்கேயேறுங்கண்டதுண்டோ? இங்கிதமாக
உங்களீசனிதுவாகுற் சங்கைதனையகற்றிநீர்
தங்கதுறவிருந்து புக்கதவம்புரிவதேன்? காரண

மாணிக்கவாசகர் சொல்லல்

சரணங்கள்

கல்லாலிருந்து தவஞ்செய்தயீசன்
கருத்தையுணர்ந்தறிவாய் மிக்க
நல்லார்தவஞ்செய்யக் காட்டினதாகுமக்
நன்மையதைத்தெரிவாய் வாழும்
எல்லாவுயிரையும் இங்கிதமாட்டுறேம்
என்றுலகோர்காண ஆனந்தாட்டுசெய்
வல்லாசங்காறு உளறுதீர்வாயாலே
உண்மையறியா வுதுத்தர்போற்பேசிடும் புத்த

மைந்தன்வியாதிக்குத் தாய்மருந்துண்ணுவள்
மாதேவரும்அதுபோலே சிவர்
வெற்றிடுதுன்பம் அகற்றிடயீசனும்
வெண்ணீறத்தார்அன்பாலே பரன்
சிந்தைமகிழ்ந்து உமையையொருபாகஞ்
சேர்த்ததெதற்கென்றீர் செகந்தனிலுள்ள
அர்த்தமில்லோர்க்குப் போகந்தரவேண்டி
அம்மைத்தாரிடது பாகத்திலென்றறி புத்த



[அடிகள் புத்தகுருவின் வினாக்களுக்குத்தக்க விடை கூறி 'உங்கள் கடவுட்கு ஓர் உவமை கூறுக' என, ஆசிரியன் 'எம் கடவுள் உவமையிலமைபவர் அன்று, உமது கடவுட்கே கூறுக' என்று வினவ மணிவாசகர் அறைகின்றார்.]

விருத்தம்.

தக்கமெய்த்தவங்கள்ஞானந்தனைகுணம்பொறுமையில்லா
வெக்காரம்புத்தர்காண, இந்துவும்எரிவாய்நாகம்
கொக்கிறகணிந்தார் அன்பர்டலர்ந்தகோமயத்தைநவாங்கிச்
செக்கர்அம்தழல்வாய்ப்பெய்துரிவந்திடவெதுப்பிவாங்கி

இதுவுமது

இவ்வண்ணமிருக்குமெங்களிறைவன்னவடிவும்அந்தச்
செவ்வண்ணமேனிபூத்ததிருவெண்ணீறதுவுமென்று
மெய்வண்ணமுணர்ந்தவேதவித்தகர் அவைமுன்காட்ட
உய்வண்ணம்அறியாமூடருள்ளமுமுயிருந்தேறாநின்றார்.

[மணிவாசகர் பின்னர் கலைமகளை நோக்கி.]

திருவாதவூரர் புராண செய்யுள்

"தொக்கநான்மறைசொல்லுரியவைசொல்லதென்கலைமாதராய்த்
தக்கன்வேள்வியில்உன்றன்நாசிதடிந்ததின்துமறந்தபோ
முக்கணன்அருளில்லையென்றிமூர்க்கர்நாவையன்னுரி
நக்கனார்திருவானைஎகு" எனநாமடந்தையுமஞ்சினாள்.

[அடிகளின் சொற்றிறத்தால் கலைமகள் பௌத்தர்கள் நாவினின்று நீங்க அவர்கள் யாவரும் வாய் பேசாதவர்களாயினர். ஈழமன்னன் அது கண்டு அடிகளை வணங்கி, 'பெரும.' பேசினவர் மூகையாதல் வியப்பல்ல. ஆனால் என் மகளின் ஊமைப் பிணியை நீக்கின் யான் என் குலத்துடன் சைவம் 'தழுவுவேன்' என, அடிகள் மன்னனது மகளை வருவித்து அருள் நோக்கு அளித்து, ஆடவல்லானை அகத்துள் கொண்டு 'புத்தர்களது வினாவிற்கு விடை கூறுவாயாக' எனக் கூறிச் சிவத்தின் பெருமையை அமைத்துத் திருச்சாழல் பாட, ஊமைப்பெண் விடை பகர்ந்தாள்.]

மாணிக்கவாசகர் வினவுதல்; ஊமைப்பெண் விடைகூறுதல்.

திருவாசகம் திருச்சாழல்.

வினா. பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதும்திருவாயான் மறைபோலுங்காணேடி.

விடை. பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவனெவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

வினா. என்னப்பன்எம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய்கோவணமாக் கொள்ளுமதுவென்னேடீ.

விடை. மன்னுகலைதுன்னுபொருள் மறைநான்கேவான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

வினா. கோயில் சுடுகாடு கொல்புலித்தோல்நல் ஆடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி.

விடை. தாயுமிலி தந்தையிலி தான்தனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

[புத்தமன்னன் தன் மகள் ஊமைத்தன்மை நீங்கி பேரறிவு வாய்ந்தமையைக் கண்டு, அடிகளைத் தொழுதுச் சைவம் தழுவினான். ஆங்குளார் அனைவரும் 'பொன்னம்பலம் வாழ்க' என ஒலியெழுப்பினர். ஈழநாட்டரசனின் வேண்டுகோட்கு இரங்கி' மணிவாசகர் மறுபடியும் வாதில் வென்ற புத்தர்களைப் பேச அருளினார். அவர்களும் அடிகளை வணங்கி, திருநீறு, உருத்திராக்கம் பூண்டு மயிற்பீலி சிவரப்போர்வை இவற்றில் தீயிட்டு, சைவராயினர். பின்னர் எல்லோரும் ஆடவல்லானைத் தொழுது, தம் தம் இருப்பிடம் செல்ல, அடிகள் தில்லையிலேயே இனிது இருந்தனர். அதுபோது ஒரு நாள் அடிகள் அருளிய திருவாசகத்தை உலகில் வெளிப்படுத்தக் கருதி இறைவன் அந்தண வடிவு கொண்டு அடிகளிடம் வந்தார்.]

திருவிளையாடற் புராணச் செய்யுள்

ஐயரங்குறையுநாளில் ஆடகமன்றிலாடும்
மெய்யர் தங்கருணையாலே வேதிய வடிவங்கொண்டு
துய்ய முப்புரிநூல்மார்புந் துலங்கு புத்தகமுந் தோன்றச்
செய்யமென்பாதம் நோவச்சென்று முன்னாக நின்றார்.

மாணிக்கவாசகருக்கும் பரமனாகிய வேதியருக்கும் நடக்கும் வாக்குவாதம்.

கீர்த்தனம்-இராகம்-தண்டகம்-எதுகுலகாம்போதி.

சுவாமி.

மன்றுள்நாயக னந்தணர் வடிவாய்
மாணிக்கவாசகர் முன்—நீறு
மணியுட்புரி நூலணிந்து புத்தகங்கையில்
மருவிடவெழுந்து வந்தார்.



மாணிக்கவாசகர்

வந்த வேதியர் முகந்தனை நோக்கி
வாருமிருமென்று—அன்பர்
வளர் மறையுணர்ந்த பெரியவரே நீர்
வசிக்குமூரேது வென்றார்.

சுவாமி சொல்லல்.

என்று கேட்டவுடன் வந்த வேதியர்நாம்
இருப்பது புகழோங்கும்—உயர்
எழிற்றிகழ் பாண்டி நாடதுவாகும்
என்றனரதை யறிந்து.

மாணிக்கவாசகர் சொல்லல்.

அறிந்தடி பணிந்து உபசரித்தவரை
ஐயரே மதுரை விட்டு—மிக
அன்புடனி விடம் வந்த காரணமென்ன
அறிவிப்பீர் பாண்டிய நாடரே.

சுவாமி சொல்லல்.

பாண்டிநாட்டிற் பரனைப் பரி மீது வரச்செய்தும்
பகருப தேசம் பெற்றுந்—தில்லையிற்
பண்பாய்ப் புத்தரை வாதில் வென்றதையு மறிந்து
பார்க்க நும்மிடம் வந்தோம்.

மாணிக்கவாசகர் சொல்லல்.

வந்த பெரியவரேயீசன் செயலறிய
வல்லமை இல்லாத நாயேன்—என்னை
வாழ்த்துவது தகுமோ சுருதி முடிவறிந்த
மறையவரே சொல்லும்.

பரமன் சொல்லல்

சொல்லரிய பரமன் மேல் பத்தியானல் நீர்
சொல்லிய தமிழ்ப்பாடல்—முற்றும்
சொல்ல நினைத்துத் துக்க நீங்குதற் இங்கு வந்தோம்
சொல்லும் எழுதல் வேண்டும்.

அடிகள் கூறல்

வேண்டுமென்ற வேதியர் மொழி கடவாமல்
விருப்பமாய் அதைக் கேட்டு—மாயை
வேரறுத்தின்பம் நல்கும் திருவாசகத்தை அன்பர்
வேதியரிடம் சொன்னார்.

[வந்தவேதியர் மாணிக்க மொழியாம் திருவாசகத்தை அடிகள் கூற எழுதிக்கொண்டு பாட்டுடைத்தலைவனாக அம்பல வாணனை அமைத்து ஒரு கோவை பாட வேண்ட, அடிகளும் அவ்வாறே அருள, அதையும் எழுதிக்கொண்டு முடிவில் திருச்சிற்றம்பலமுடையார் கைபெழுத்து என்று எழுதிச் சுவடியுடன் மறைந்தருளினார். வந்தவர் இறைவனென உணர்ந்ததும் அடிகள் மனம் பதைத்து ஒருவாறு தெளிந்து பரவிட்டை கூடினார். ஆடவல்லான் தன் இடம் சென்று, சூழ்ந்து நிற்கும் தேவர்களிடம் திருவாசகத்தைக் காண்பித்துக் கூறுகின்றார்.]

கீர்த்தனம்-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைநடராசர் திருவாசகத்தைத். தில்லை

அநுபல்லவி.

ஒல்லையிலெழுதி யுற்றனர் சபையில் தில்லை

மாலயன் இந்திராதி மாமுனிவரைநோக்கிச்
சீலமாய்க்கொண்டாடிச் செப்பினார்அன் பாகத். தில்லை

பார்த்திராகமது பத்தன்வாதவூரர்
கீர்த்தியாய்ப்பாடின நிகழ்பாடலென்றார். தில்லை

என்புருகிக்கண்ணில் இன்பவெள்ளமோட
அன்பினாற்பாடின அருட்பாவென்றாரே. தில்லை

ஏதுயிதுபோலே எங்குங்கேட்டதுண்டோ
ஓதுவீரிருந்தால் உவந்தெமக்கென்றார். தில்லை

கண்டுவியப்பெய்திக் களித்தனைவோரும்
பண்டுக்காணோமென்னப் பரனுமகிழ்ந்தார். தில்லை

கனகசபையான் கையினாலெழுதி
இனமாய்த்தன்பேரும் இட்டனரென்றார்முன். தில்லை

பண்பாய்மைக்காப்பிட்டுப் பஞ்சாட்சரப்படி
முன்புவையுமென்றார் முக்கண்முதல்வனார். தில்லை

கந்தசாமிபோற்றுங் கனகசபேசரைச்
சிந்தித்தவ்விதம்போல் செய்தார்கள்செஞ்சடைத். தில்லை

[இந்திரன் முதலிய தேவர்களனைவரும் திருவாசகத்தைப் படித்து மனமகிழ்வு எய்தி மைக்காப்பிட்டு ஐந்தெழுத்துப்படி மிசை வைத்தனர். அஃதைத் தில்லை மூவாயிரவர்களும் கண்டு



...லர் சாத்தி நறும்புகை, தீபம் காட்டித்தொழுது ...ங்கித், தம்முள் சொல்நலம் வாய்ந்த ஒருவரை அதைப் ...கும்படி வேண்ட அவரும் சுவடியை எடுத்து அன்பு ...அச்சமீக்கூற அவிழ்த்துப்படிக்கலுற்றார்.]

திருவாதவூரர் புராணச்செய்யுள்

திருச்சதக முதலாகச்சிறந்த தமிழ்அறுநூறும்
விரித்தவுகப் பொருட்கோவை விளங்க வொருநானூறும்
உரைத்தனர் பின் முடிந்த விடத்துயர் வாதவூரன் மொழி
தரித்தெழுதும்அம் பலவன்எழுத்தென்று சாற்றினார்.

[வாசகர், கோவை முடிவுற்ற இடத்து "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் கையெழுத்து" என்று பொறிக்கப்பெற்றிருப்பதைக் கேட்டதும் மூவாயிரவரும் மகிழ்ச்சிக்கடலுள் ஆழ்ந்தவராய், மாணிக்கமொழியாரிடம் சென்றனர்.]

தில்லை மூவாயிரவர்கள் வருகிறவிதம்.

கீர்த்தனம்-இராகம்-இந்துஸ்தான் காப்பி-ஏகதாளம்.

பல்லவி

வந்தார் தில்லை மூவாயிரவர்-வாதவூரர்பால்
வாழ்த்தி-வாழ்த்தி-வாழ்த்திநெஞ்சம்-வணக்கமாகவே. வந்தார்

நீறுபூசிக்கண்டிகையும்-நிறையவணிந்து
நினைந்து-நினைந்து-நினைந்துஅன்பை-நேசமாகவே. வந்தார்

பஞ்சகச்சம்பூணூலும்-பண்பாய்விளங்கப் [வந்தார்
பார்ப்போம்-பார்ப்போம்-பார்ப்போமென்று-பட்சமுடனே.

அம்பலவர்க்கடிமை செய்யும்-அரியவந்தணர்
அணுகி-யணுகி-யணுகியொன்றாய்-ஆசாரமாக. வந்தார்

கந்தசாமிபோற்றும்அம்பலக்-கடவுளரைத்தம் [வந்தார்
கருத்திற்-கருத்திற்-கருத்தில்நினைந்து-கைப்புத்தகத்துடன்

திருவாதவூரர் புராணச்செய்யுள்.

சென்றவர்தம் திருமுன்பு திருமுறையைத் தண்டர்பிரான்
நின்றசெயுஞ் செயலிதுவென் றியம்பினர் நின்றெல்லோரும்
என்றுமென் புன்பாடலை வந்தருளப் புவி மீதில்
அன்றுசெயுந் தவமறியேன்என் றழுதாரன்பாளர்.

[மணிவாசகரிடம் மூவாயிரவரும், அம்பலவாணன் களிடம் போந்து திருவாசகத்தைத் திருக்கரத்தால் எழு கைச்சாத்திட்டிருப்பதின் காரணத்தைவினவ, அழுதடியடை அன்பர், தன்னிடம் புரிந்த ஆண்டவனின் திருக்கூற்றத் கூற, வியப்புற்று, திருவாசகத்திற்குத் தில்லையாடி கைச்சாத்து கொடுத்திருப்பது, 'உலகில் திருவாசகத்தி திருவாசகமும் இல்லை' என்பதை உணர்த்துகின்றது எ புகழ்ந்து, அந்நூலின் பொருளை விளக்கும்படி மூவாயிரவ வேண்ட, 'பொருள் கூறுவேன் வாரீர்' என்று அடிகள் கனக சபைக்கு அழைத்து வந்தார்.]

நால்வர் நான்மணிமாலை.

பெருந்துறை புகுந்து பேரின்பவெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியக்
ஆசகல்அல்குல்வேய்த்தோளிட ந்தவனே.

மாணிக்கவாசக சுவாமிகள் சிற்சபையிற் கலந்தருளியவிதம்.

கீர்த்தனம்-இராகம்-நாட்டைக்குறிஞ்சி-ஆதிதாளம்.

பல்லவி

பொருளிவர்தா மென்றுசபைநேரே
புகுந்தாரே. பொருள்

அநுபல்லவி.

அருள்மாணிக்கத் தெருள்வாசகர்
அம்பலவாணரைச் சம்பிரமதாய்க்காட்டிப். பொ

சரணங்கள்

பாலவரும் அலர் மேலவரும் பாம்பின்
காலவரும்புலிக் காலவருந்திக்குப்
பாலகருந்தவக் கோலவரும்முனிச்
சீலவருந்தில்லை ஞாலவரும்போற்றப். பொருள்

தூயருமறைசொல் வாயரும்வினையு
பாயருமிந்திர ராயருமக்ரச
காயருந்திகழு ஞாயிறுமதிகள்
சேயருந்தில்லைமூ வாயிரநங்காணப். பொருள்

பாடிடவுமெல்லோர்
நாடிடவும்வினை
தாடிடவுந்தாளம்
...ன் டாடிடவும்நின்று. பொருள்

...வும்கையைச் சேர்த்திடவும்புகழ்
...வுமலர் தூற்றிடவுந்தேவர்
...திடவுங்கணம் ஆர்த்திடவுந்தேகம்
...திடவும்பாவம் வீழ்த்திடவும்அன்பர். பொருள்

திருவிளையாடற் புராணச் செய்யுள்.

...சறுமணிபோற் பன்னுள் வாசகமாலை சாத்திப்
...வினைசெய்து பன்னுட் புண்ணியமன்றுளாடும்
...னதடிக் கீழெய்தி யிறிலா அறிவானந்தக்
...சொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்.

கீர்த்தனம்-இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

...ம் ஜெயமங்களம் புகழ்-மாணிக்கவாசகருக்கு மங்களம்

அநுபல்லவி.

...ங்கம் பெண்ணாக்கிய ஞானசம்பந்தர்க்கும்
...தியிற்கற்றெப்பமான அப்பருக்கும்
...கள் முடியோனைத் தூது விட்டவர்க்குந்
...ம்பதஞ்சலி வியாக்ரம பாதர்க்கும். மங்களம்

சரணங்கள்.

...ஞ் செயுமம்பலவாணர்க்குஞ்
... விநாயகர் வேலவர்க்கும்
...மணிமாலயனவர்க்கும்
...வந்தில்லை மூவாயிரவருக்குந்
...ந்மூல் வாழிந்திரன் வானவர்க்குந்
...க்கமறை முனிஇருடிகள் யாவர்க்கும்
அருந்தவ அரிமர்த்தன மன்னவர்க்கும்
... மூன்று நாயன்மார்களுக்கும். மங்களம்

...ர் பூத கணங்களுக்குஞ்
...ரார்கிம்புடருக்குந்
...முனி மார்க்கண்ட முனிவர்க்குந்
...தற்பரனைப் பூசித்தேத்து மேல்லோருக்கும்

புவனம் புகழுஞ் சித்தர் குழாத்திற்கும்
பூரணஞானமெஞ்ஞானியர்களுக்கும்
பவமில்வசுக்கள் கந்தருவருக்கும்
பாரிலுள்ள பெரியோர்களனைவர்க்கும்

வாழி விருத்தம்.

பொற்பரன்உமையும் வாழ்கப் பூமழை பொழிந்து வாழ்க
நற்பெருஞ் சைவம் வாழ்க நன்மணி நீறும் வாழ்க
விற்பனர் வேள்வி வாழ்க வேந்தர் கீர்த்தனையும் வாழ்கக்
கற்பவர் கேட்போர் வாழ்கக் கருணைப்பிரகாசன் வாழ்க.

திருவாதவூரென்ற வழங்குகின்ற
மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரக்கீர்த்தனை.

முற்றுப் பெற்றது

'திருச்சிற்றம்பலம்!'

Q23:47x1
4162
120113

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.